விலை: 30.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 01 ஞாயிற்றுக்கிழமை (14.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116

வலம்புரி
வாசகர்கள்
அனைவருக்கும்
இனிய
சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

## சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உப குழு
# இராணுவ முகாம்களுக்குள்
# சோதனை மேற்கொண்டது

### இரகசிய நேர் காணலையும் பெற்றுச் சென்றது



(கொழும்பு))

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உபகுழு இராணுவ முகாம்கள், தடுப்பு முகாம்கள் உள்ளிட்டவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

(32ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு அருகே

## நேற்று இரவு நில நடுக்கம்

(கொழும்பு)

இலங்கையை அண்மித்த கடற்பகுதியில் இரண்டு நில நடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கங்கள் நேற்றிரவு 9.04 31

## இலங்கையுடனான நல்லுறவு மேலும் பலப்பட வேண்டும்

### புத்தாண்டு வாழ்த்தில் அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

மலரவுள்ள புதிய புத்தாண்டில், அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான நல்லுறவு மேலும் பலப்படவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் புதுவருடத்தை முன்னிட்டு, இலங்கை மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வாழ் மக்கள், 32

## மானிடம் இன்புற பேதங்களைத் துறப்போம்



### நல்லை ஆதீன முதல்வர் புத்தாண்டுச் செய்தி

(யாழ்ப்பாணம்)

பிறக்கின்ற விகாரி புத்தாண்டில் இன, மத ஒற்றுமை மேலோங்க வேண்டும். இதற்காக அனைத்து மக்களும் இன, மத, மொழிசார் வக்கிரங்களை சங்காரம் செய்து மானிடம் வாழ்வதற்கு உதவ வேண்டும். இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ 31

திருப்பதி பயணத்தை

## ரத்துச் செய்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி ஏழு மலையான் ஆலயத்துக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை திடீரென ரத்துச் செய்துள்ளார். 31

கோத்தபாய ராஜபக்ஷ


## ஜனாதிபதியாக வரமுடியாது

### துமிந்த திசாநாயக்க

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவோ அல்லது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவோ நடைமுறை யிலுள்ள சட்டத்துக்கமைய இந் நாட் 31

## யாழிலிருந்து கொழும்பு பயணித்த ஹயஸ் வான் புத்தளத்தில் விபத்து



### லண்டனைச் சேர்ந்த நயினாதீவுப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ஹயஸ்வாகனம் விபத்துக்குள்ளானதில் லண்டனை சேர்ந்த நயினாதீவுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் நான்குபேர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதி ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இவ் விபத்து 32

வல்வெட்டித்துறையில்

## பெண் ஒருவரின் சங்கிலி அறுப்பு

(கரணவாய்)

வல்வெட்டிதுறைப் பகுதியில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடிய நபர் ஒருவரை பொலிஸார் துரத்திப் பிடித்த சம்பவம் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. 31

## சர்வதேசமே இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும்

### மாவை சேனாதிராசா கோரிக்கை



(வவுனியா)

இலங்கையில் கடந்த ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியின்போது செயற்பட்டதைப்போல, தமிழர்களின் இனப்பிரச்சினைக் கானத் தீர்வு விடயத்தில் 32

## முள்ளிவாய்க்கால் அவலத்தை திரைப்படமாக்கவுள்ளேன்

### யாழில் திரைப்பட இயக்குநர் கேதீஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற அழிவுகளை ஆங்கிலத் திரைப்படத்தின் மூலம் உண்மையை வெளிக்கொண்டு 32

## இன்று முதல் 3 நாட்களுக்கு

### கடும் வெயில் நிலவும்

(கொழும்பு)

இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நாட்டின் சில பாகங்களில் வெப்பமான வானிலை நிலவக் கூடும் என கால 31

புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்ற

## சங்கீதக் கதிரைப் போட்டியில் வென்ற பொலிஸ் மரணம்

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டினை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். அங்குணுகொலபொலஸ்ஸ பொலிஸாரினால் நேற்று முன்தினம் புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சஞ்சீவ [illegible] 40 வயதான 3 32

## 17 பவுண் தங்க நகை வீடு உடைத்து கொள்ளை

### புலோலி புற்றளையில் சம்பவம்

(கரணவாய்)

வீடு உடைத்து உள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 17 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர். நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் புலோலி தெற்கு. 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு இம்மாத இறுதிக்குள் நியமனம்

## வடக்கு கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வட மாகாணப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு இம்மாத இறுதியில் நியமனம் வழங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

நேர்முகத்தேர்வில் சித்தியடைந்த 57 தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளின் பெயர்கள் வட மாகாண ஆளு நரின் அனுமதிக் காக அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

அனுமதி கிடைத்ததும் இம் மாத இறுதிக்குள் அவர்களுக்கான நியமனம் வழங் கப்படும் என அவர் மேலும் தெரி வித்தார். (ம-3,10)


## பணிப்பெண் தேவை

கொக்குவில் பகுதியில் உள்ள 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்பு (8469)

**076 939 7501**


# இலங்கையின் பொருளாதாரத்தை சீனா சீரழிக்கின்றது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

பட்டுப்பாதைத் திட்டத்தின் மூலம், இலங்கை உட்பட பல நாடுகளின் இறை மைக்கு பங்கம் ஏற்படுத்துவதுடன், அவற் றின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் சீனா செயற்படுவதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது.

சீனாவினால் பல கோடி அமெரிக்க டொலர் செலவில் முன்னெடுக்கப்படும் நவீன பட்டுப் பாதையின் ஆரம்ப முயற்சியின் மூலம் சர்வதேச ரீதியாக சிறப்பான கடற் படை ஒன்றினை தன்னிச்சையாக ஸ்தாபிக் கும் நடவடிக்கைகளில் சீனா ஈடுபட்டுள்ள தாக கடற்படை அதிகாரி ஜோன் ரிச்சட்சன் தெரிவித்துள்ளார்.

'பட்டி மற்றும் வீதி' திட்டங்களின் ஊடாக ஏனைய நாடுகளின் உட்கட்டமைப்பு பணி களுக்காக பல பில்லியன் அமெரிக்க டொலர் களை சீனா வழங்குவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்த நிலை இலங்கை, பாகிஸ்தான், ஜிபோட்டி போன்ற நாடுகளுக்கு சீனாவினால் விஸ்தரிக்கப்படுவதுடன், தற்போது நேட்டோ உறுப்பு நாடுகளான கிரீஸ் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளையும் அணுகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுக்கொள்ள முடியாத திட்டங்கள் மூலம் சீனா ஏனைய நாடுகளின் பொருளா தார பின்னடைவிற்கு வழியேற்படுத்துவ தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)




பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு

## பண்டாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா

இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது. நாளை (15.04.2019) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு 108 அடியார்களின் பாற்குட பவனியும் மு.ப 11 மணிக்கு பொங்கல் விழாவுக்கான பூசைகள் நடைபெற்று தீ மிதிப்பு வைபவமும் இடம்பெறும்.

**சி.சபாரத்தின தேசிகர்,**
**சபா.பாஸ்கரக் குருக்கள்**
*(பிரதம குருவும் ஆதீன கர்த்தாக்களும்)*

(C-6083)

## சீரடி பாபா ஆலயம்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. சேவை செய்வதற்கு, தங்கி நின்று சேவை செய்வதற்கு தொண்டர்களை அழைக்கின்றோம்.

அதிசயங்களும், சித்துக்களும் செய்து தம்மை பறை சாற்றிக் கொண்டவர் அல்லர் அவர். சுகபோகங்களில் வாழ்ந்து, காரிலும் விமானத்திலும் பறந்தவரல்லர்; பாலும் பழமும் தங்க பஸ்பங்களும் உண்டு வாழ்ந்த வரல்லர்.

ஏழைப் பக்கிரியே அவர். பரம ஏழை. சந்து பொந்து போன்ற வீடுகளில், மனிதர்கள், பிராணிகளை போல அவலமாக வாழ்ந்த ஒரு குக்கிராமத்திலே எளியவர்களுடன் வாழ்ந்தவர்.

தொடர்புகளுக்கு - சீரடி பாபா ஆலயம்
தெல்லிப்பளை வீதி, பெரியவிளான்,
இளவாலை,

**கண்ணன் : 076 573 2537**

(8450)

# புதுவருட வாழ்த்துக்கள்



யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை,
**கொமர்ஷல் வங்கியின்** பிராந்திய முகாமையாளர், முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டுவதுடன் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
அத்துடன் யாழ்ப்பாணம் **இராஜேஸ்வரி** புடைவை விற்பனை நிலைய உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் ஸ்ரான்லி வீதி **சிங்கர்** நிறுவன முகாமையாளருக்கும் ஊழியர்களுக்கும் அவர்களின் சிறந்த செயற்பாட்டைப் பாராட்டி *புதுவருட வாழ்த்துக்களையும்* தெரிவித்து கொள்கின்றேன்.

**R.சிறிதரன், வேணுகா ரவல்ஸ்**
79, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

(8465)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**


# மரண அறிவித்தல்

## திருமதி பாலச்சந்திரன் தவமணி

**(முன்னாள் நூலக உதவியாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி)**



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் திருவையாறு கிளிநொச்சியை வசிப் பிடமாகவும் தற்போது பொற்பதி வீதி கொக்குவிலில் வசித்து வந்தவரு மான திருமதி பாலச்சந்திரன் தவமணி அவர்கள் நேற்று முன்தினம் (11.04. 2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலம் - தெய்வானை தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினராசா - சிவகாமி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரம் (ஓவசியர்) அவர்களின் அன்புப் பேர்த்தியும், வினோயா (யாழ்ப்பாணம்), பிரசாத் (கனடா), பிரசன்னா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார் (குரு ஹாட்வெயார், கிளிநொச்சி), நிருசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுஜன், ஹம்சிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இந்திராதேவி (கிளிநொச்சி), விசுவலிங்கம் (கிளிநொச்சி), காலஞ்சென்ற இந்திரதாஸ், கௌரி (கிளி நொச்சி), பாலசரஸ்வதி (வவுனியா), காலஞ்சென்றவர்களான யோகராணி, சஜீகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகௌரி (யாழ்ப்பாணம்), சந்திரவதனி (லண்டன்), காலஞ்சென்ற பாஸ்கரன், கமலாசனி (லண்டன்), கோசலாதேவி (கனடா), பாலராஜ் (கனடா) காலஞ்சென்ற சுரேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், யசோதரன் (உளவளத்துணையாளர், கிளிநொச்சி) அவர்களின் சிறிய தாயாரும், பிரபாகரன் (கனடா), பார்த்தீபன் (லண்டன்), மிருணாளினி (கனடா), விசாலி (கனடா), மாதங்கி(கனடா), விதுர்சி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், முரளிதரன் (நோர்வே), சுவர்ணா (லண்டன்), சசிதரன் (யாழ்ப்பாணம்), சஞ்யுதா (யாழ்ப்பாணம்), ஆதவன் (கனடா), ஆர்த்தி (கனடா), கருணாகரன் (கிளிநொச்சி), யாழினி (கிளிநொச்சி), காலஞ்சென்ற பவானி, றஜீவன் (கிளிநொச்சி), றஜிந்தன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2019) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் (59/7, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு) காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**59/7, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.** (8964)

*தகவல் : குடும்பத்தினர்*
**021 222 0308**
**077 669 1045**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சத்தமின்றி தமிழ்க் கிராமங்கள் ஆக்கிரமிப்பு

# பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பின்வாங்கும் தமிழ்க் கூட்டமைப்பை எவ்வாறு ஆதரிப்பது?

## தமிழரசுக் கட்சித் தலைவரிடம் ஆதரவாளர்கள் சரமாரிக் கேள்வி

(நாவிதன்வெளி)

பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதில் பின்வாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் எவ்வாறு ஆதரிப்பது என தமிழரசுக் கட்சித் தலைவரிடம் சரமாரி கேள்விகளை சம்மாந்துறை தொகுதியின் கட்சி ஆதரவாளர்கள் முன்வைத்துள்ளனர்.



அம்பாறை - நாவிதன்வெளி பிரதேசத்தில் கட்சியின் மாநாடு தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் சம்மாந்துறை தொகுதி தலைவர் த.கலையரசன் தலைமையில் நாவிதன்வெளி பிரதேசசபைக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கட்சி ஆதரவாளர்கள் சம்மாந்துறை தொகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தலைமைகள் தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியுள்ளனர். சம்மாந்துறை தொகுதியில் கடந்த மூன்று முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கட்சித் தலைவர்களின் கவனயீனமே காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். மல்லிகைத்தீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. இது வரை நான்கு பேர் சிறுநீரகப் பிரச்சினையால் இறந்துள்ளதோடு 22 பேர் சிறுநீரக பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

ஒன்றரை கிலோமீற்றர் தூரத்திற்கு குடிநீர் குழாய்களை பொருத்தி தரமுடியாதுள்ளதாக வருத்தத்தை வெளிப்படுத்தினர்.

முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பிரதேசசபைகள் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டு தமிழ் பிரதேசங்களின் எல்லைகளிலுள்ள முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கியதுமான புதிய பிரதேசசபைகளின் தோற்றத்தோடு சத்தமின்றி தமிழ் கிராமங்கள் ஆக்கிரமிக்கப்படுவதாக தெரியப்படுத்தப்பட்டதோடு கட்சியின் தலைவர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ மக்களின் குறைகளை வந்து கேட்டறிவதில்லை எனக் குற்றம் சாட்டினர்.

மேலும், முஸ்லிம், சிங்களப் பிரதேசங்களின் எல்லையிலுள்ள சம்மாந்துறை தொகுதி தமிழ் மக்கள் தேசிய கட்சிக்குள் இலகுவாக ஈர்க்கப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் ஆட்டம் காணும் நிலையிலுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த அமர்வுகளில் விவாத பொருளாக மாறிய கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தரமுடியாமல் இருக்கும் தமிழ்த் தேசியத் தலைமைகள் இனப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகளைப் பெற்றுத்தரப் போகின்றார்கள்.

அரசாங்கத்திற்கு கடந்த காலத்திலும், இப்பொழுதுவரை தோள் கொடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய பிரச்சினைகளுக்குதான் தீர்வினை பெறுவதில் இழுத்தடிப்புகளைச் செய்து வந்தாலும் கிழக்கு மக்களின் நில உரிமைகள் அதிவேகமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருவதையும் கண்டும்காணாமல் இருப்பதாக சுட்டிக்காட்டினர்.

அத்துடன் அரசுக்கு கொடுக்கும் ஆதரவில் நிபந்தனைகளை முன்வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் கூட்டமைப்பு தயக்கம் காட்டி வருவதாக அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (இ)

## பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அரசியல் தீர்மானங்களை மாற்ற முடியாது

### நாமல் எம்.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வெளிநாடுகளில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இந்த நாட்டு அரசியல் தீர்மானங்களை மாற்றுவதற்கு முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசியல் தீர்மானங்களை எடுப்பது இந்த நாட்டு மக்களே என்றும் கம்பஹா பிரதேசத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 24 மணித்தியாலங்களில் 289 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸார் நடத்திய விசேட நடவடிக்கையில் மது போதையில் வாகனங்களைச் செலுத்திய 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரை இந்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை போக்குவரத்துக் குற்றங்களுக்காக 9 ஆயிரத்து 604 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (இ)

## புத்தாண்டை முன்னிட்டு

# புகையிரதங்களில் நிரம்பி வழிந்த பயணிகள்



(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட சகல புகையிரதங்களிலும் பயணிகள் நிரம்பிக் காணப்பட்டதாக கொழும்பு கோட்டை புகையிரத நிலைய பொறுப்பதிகாரி பியல் விஜேசிறி தெரிவித்துள்ளார்.

பதுளை நோக்கிப் பயணித்த அதிகாலை 5.55 புகையிரதம் மற்றும் 7.05 புகையிரதம் என்பவற்றில் பயணிப்பதற்கு கொழும்பு கோட்டை புகையிரதம் நிலையத்திற்கு அதிகளவான பயணிகள் வருகை தந்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை முதல் இடம்பெற்ற புகையிரதம் பயணங்களில் அதிகளவிலான பயணிகள் மலையகத்தை நோக்கிய புகையிரதங்களிலேயே பயணித்துள்ளனர்.

இதன்படி, நேற்றுக் காலை 9 மணிக்கு பதுளை நோக்கி பயணிக்க மேலதிக புகையிரதம் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 6.35 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த யாழ்தேவி புகையிரதத்திலும் பயணிகள் நிரம்பிக் காணப்பட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ)

## அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்தையும் தாண்டிய வாகனங்கள்



(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் தாண்டியுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். ஓபநாயக்க தெரிவித்துள்ளார்.

வழமையான நாட்களில் நெடுஞ்சாலைகளில் சுமார் 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

எனினும், இந்தப் பண்டிகைக் காலத்தில் நாளொன்றிற்கு ஒரு இலட்சத்து ஐயாயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரம் வரையிலான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனங்களின் நெரிசலைக் குறைப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வந்ததே வந்ததே 'சந்தோசம்' தந்ததே தந்ததே 'உற்சாகம்'

## வெற்றிப் பாதைக்கு திரும்பியது ஹோலியின் பெங்களூர்



அரைச்சதம் அடித்த பெங்களூர் அணித் தலைவர் விராட் ஹோலி

ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணி முதல் வெற்றியை பதிவு செய்தது. பஞ்சாப் அணிக்கு எதிரான லீக் போட்டியில் அணித் தலைவர் ஹோலி, டிவில்லியர்ஸ் அரைச்சதம் கடந்து கைகொடுக்க 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியாவில், 12ஆவது ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர்நடக்கிறது. மொகாலியில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித் தலைவர் விராட் ஹோலி, 'களத்தடுப்பை' தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல், கிறிஸ் கெய்ல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரை கட்டுக்கோப்பாக வீசிய உமேஷ் யாதவ், 2 ஓட்டங்கள் மட்டுமே வழங்கினார். நவ்தீப் சைனி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய கெய்ல், உமேஷ் வீசிய 3வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

உமேஷ் வீசிய 5வது ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரி அடித்த லோகேஷ் ராகுல், யுவேந்திர சகால் பந்தில் ஒரு சிக்சர் விளாசி னார். தொடர்ந்து அசத்திய கெய்ல், மொஹமட் சிராஜ் வீசிய 6வது ஓவரில் 2 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 24 ஓட்டங்கள் எடுத்தார். முதல் விக்கெட்டுக்காக 66 ஓட்டங்கள் சேர்த்த போது சகால் 'சுழலில்' ராகுல் (18) சிக்கினார். பொறுப்பாக ஆடிய கெய்ல், ஐ.பி.எல்., தொடரில் தனது 27வது அரைசதத்தை பதிவு செய்தார்.

மொயீன் அலி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய மயாங்க் அகர்வால், சகால் பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். இவர், 15 ரன்னில் சகாலிடம் சரணடைந்தார். மொஹமட் சிராஜ் பந்தில் ஒரு சிக்சர் அடித்த சர்பராஸ் கான் (15) நிலைக்கவில்லை. மொயீன் அலி 'சுழலில்' சாம் கர்ரான் (1) ஆட்டமிழந்தார். உமேஷ் வீசிய 19ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய கெய்ல், சிராஜ் வீசிய கடைசி ஓவரில் 2 பவுண்டரி அடித்தார்.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 173 ரன்கள் எடுத்தது. கெய்ல் (99), மன்தீப் சிங் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பெங்களூரு அணி சார்பில் யுவேந்திர சகால் 2 விக்கெட் வீழ்த்தினார்.

**ஹோலி அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்கு பார்த்திவ் படேல் (19) ஓரளவு கைகொடுத்தார். மொஹமட் ஷமி, முருகன் அஷ்வின் ஓவரில் தொடர்ச்சியாக தலா 2 பவுண்டரி அடித்தார் அணித் தலைவர் ஹோலி. அடுத்து வந்த டி வில்லியர்ஸ், ஷமி வீசிய 5வது ஓவரில் 2 பவுண்டரி விரட்டினார். அபாரமாக ஆடிய கோஹ்லி 37 பந்தில் அரைசதமடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 85 ஓட்டங்கள் சேர்த்த போது ஷமி 'வேகத்தில்' ஹோலி (67) ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அசத்திய டி வில்லியர்ஸ், தன்பங்கிற்கு அரைசதமடித்தார். அன்ட்ரூ டை வீசிய 18வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த ஸ்ரொய்னிஸ், சர்பராஸ் கான் வீசிய கடைசி ஓவரில் ஒரு பவுண்டரி உட்பட 6 ஓட்டங்கள் எடுத்து வெற்றியை உறுதி செய்தார்.

பெங்களூர் அணி 19.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்து இந்த சீசனில் முதல் வெற்றி பெற்றது. டி வில்லியர்ஸ் (59), ஸ்டாய்னிஸ் (28) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



இறுதிவரை களத்தில் நின்று பெங்களூரின் வெற்றியை உறுதி செய்த டி வில்லியர்ஸ் ஓவ் சைட்டிலூடாக பந்தொன்றை விளாசியபோது...

**100**

பொறுப்பாக ஆடிய பஞ்சாப் அணியின் கிறிஸ் கெய்ல், 79ஆவது 'ரி20' அரைசதமடித்தார். தவிர இவர், 21 சதமடித்துள்ளார். இதன் மூலம் ஒட்டுமொத்த 'ரி20' அரங்கில், 100 முறை, 50 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் எடுத்த முதல் வீரரானார்.

**மௌன அஞ்சலி**

கடந்த 1919, ஏப். 13ல் பஞ்சாப் மாநிலம் அமிர்த சரஸ் நகரில் 'ஜாலியன் வாலாபாக் படுகொலை' நடந்தது. நேற்று, இதன் 100வது நினைவு தினத்தை முன்னிட்டு பஞ்சாப், பெங்களூர் அணி வீரர்கள் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

# பட்டையைக் கிளப்பினார் பட்லர்

## ராஜஸ்தான் அசத்தல் வெற்றி



43 பந்துகளில் 89 ஓட்டங்கள் குவித்த பட்லர் அரைச்சதம் அடித்த தருணம்...

ஐ.பி.எல்., லீக் போட்டியில் பட்லர் 89 ஓட்டங்கள் விளாச, ராஜஸ்தான் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் மும்பை, ராஜஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. ராஜஸ்தான் அணியில் ஸ்ரோக்ஸ் (காயம்), ரியான் நீக்கப்பட்டு லியாம் லிவிங்ஸ்டன், கிருஷ்ணப்பா கௌதம் வாய்ப்பு பெற்றனர். மும்பை அணிக்கு அணித் தலைவர் ரோகித் திரும்பியதால், சித்தேஷ் நீக்கப்பட்டார்.

**குயின்ரன் அரைச்சதம்**

மும்பை அணிக்கு குயின்ரன், அணித் தலைவர் ரோகித் ஜோடி 'சுப்பர்' ஆரம்பம் கொடுத்தது. கௌதம் வீசிய மூன்றாவது ஓவரில் இருவரும் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். குல்கர்னி பந்துவீச்சில் ரோகித் மூன்று பவுண்டரி விளாசினார். ஆர்ச்சர் பந்தில் ரோகித் (47) ஆட்டமிழந்தார். குயின்டன் அரைச்சதம் எட்டினார். சூர்யகுமார் (16) பொலார்ட் (6) ஏமாற்றினர். உனத்கட் வீசிய கடைசி ஹர்திக் இரண்டு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார்.

20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களை எடுத்தது. ஹர்திக் (28), குர்னால் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் சார்பில் அதிகபட்சமாக ஆர்ச்சர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**பட்லர் மிரட்டல்**

ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் ரகானே, பட்லர் ஜோடி அசத்தியது. குர்னால் 'சுழலில்' ரகானே (37) ஆட்டமிழந்தார். பின் பட்லர் - சாம்சன் ஜோடி எதிரணி பந்துவீச்சை சிதறடித்தது. அல்ஜாரி ஜோசப் வீசிய 13வது ஓவரை குறி வைத்து தாக்கினார் பட்லர். இதில் 6,4,4,4,4,6 என விளாசி 28 ஓட்டங்கள் குவித்தார். ராகுல் சகார் 'சுழலில்' பட்லர் (89) ஆட்டமிழந்தார்.

**கோபால் கலக்கல்**

பும்ரா 'வேகத்தில்' சாம்சன் (31) சிக்கினார். குர்னால் 'சுழலில்' லிவிங்ஸ்டன் (1), ஸ்மித் (12) சரணடைந்தனர். கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், ஸ்ரேயாஸ் கோபால் பவுண்டரி அடித்து கைகொடுக்க, ராஜஸ்தான் அணி 19.3 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கோபால் (13), கௌதம் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் அதிகபட்சமாக குர்னால் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# சென்னைக்கு இனிக்குமா ஈடன்

## இன்று கொல்கத்தாவுடன் மோதல்

ஐ.பி.எல்., தொடரில் இன்று சென்னை, கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சென்னை அணி தனது வெற்றி நடையை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரின் 12வது சீசன் தற்போது நடக்கிறது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்கும் லீக் போட்டியில் இன்று நடப்பு சாம்பியன், தோனியின் சென்னை அணி, தினேஷ் கார்த்திக் தலைமையிலான கொல்கத்தாவை எதிர்கொள்கிறது.

சென்னை அணி களமிறங்கிய 7 போட்டிகளில் 6ல் வென்றுள்ளது. மீதமுள்ள 7 போட்டிகளில் 2ல் வென்றால் கூட 'பிளே ஆப்' உறுதியாகலாம். இருப்பினும் அணியின் ஆரம்ப வீரர் வோட்சனின் (7ல் 105 ஓட்.,) மோசமான 'போர்ம்' தொடர்வதால் இன்று இடம் பிடிப்பது சிரமம் தான். டுபிளசி, அடுத்து வரும் ரெய்னா, கேதர் ஜாதவ் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால், பின்வரும் வீரர்களுக்கு சிரமம் அதிகம் இருக்காது

**தோனி எப்படி?**

கேப்டன் தோனியை பொறுத்தவரையில் முதன் முறையாக, களத்தில் நடுவர்களுடன் விவாதம் செய்து அதிருப்தியை சம்பாதித்துள்ளார். இன்று சற்று 'கூல்' ஆக நடந்து கொள்ளலாம். அடுத்து வரும் அம்பதி ராயுடு அரைசதம் அடித்து 'போர்மிற்கு' திரும்பியது நல்ல விடயம் தான். சொந்தமண்ணில் வெற்றிக்கு திரும்ப முயற்சிக்கும் கொல்கத்தா அணிக்கு, சென்னை அணி தடை போடும் பட்சத்தில், இத தொடரில் இரண்டாவது முறையாக கொல்கத்தாவை வீழ்த்தலாம்.

**12**

சென்னை, கொல்கத்தா அணி கள் ஐ.பி.எல்., அரங்கில் இதுவரை 20 முறை மோதின. இதில் சென்னை 12ல் வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. கொல்கத்தா 7ல் வென்றது. ஒரு போட்டி மழையால் கைவிடப்பட்டது.

ஈடன் கார்டனில் நடந்த 8 போட்டிகளில் இரு அணிகளும் தலா 4ல் வெற்றி பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வேண்டாம்

## போப்பாண்டவர் மன்றாட்டம்







(வத்திக்கான்)

உலக சமாதானத்திற்காக போரைத் தவிர்க்குமாறு தென் சூடான் ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்களைப் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

வத்திக்கானில் தன்னை சந்தித்த தென் சூடான் ஜனாதிபதி உள்ளிட்டவர்களின் கால்களில் விழுந்து பாப்பரசர் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வத்திக்கானுக்கு விஜயம் செய்துள்ள தென் சூடான் ஜனாதிபதி சல்வாக்கீர் மற்றும் கிளர்ச்சிக்குழு தலைவரும் முன்னாள் உப ஜனாதிபதியுமான ரேக் பக்சார் உள்ளிட்டவர்கள் பரிசுத்த பாப்பரசரை கடந்த வியாழக்கிழமை சந்தித்துள்ளனர். இதன்போது உலக சமாதானத்துக்காக போரைத் தவிர்க்குமாறு இரு தலைவர்களையும் பாப்பரசர் கேட்டுக்கொண்டார்.

அதன்பின்னர் தனது ஆசனத்திலிருந்து எழுந்த பாப்பரசர், எதிர்பாராத விதமாக இரு சூடான் தலைவர்களின் கால்களிலும் விழுந்து தனது வேண்டுகோளை முன்வைத்தார்.

இது மிக உருக்கமான தருணமாக அமைந்ததாகவும் வருகை தந்த அதிகாரிகளின் கண்களில் கண்ணீரை வரவழைத்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பாப்பரசரின் இந்த உருக்கமான கோரிக்கையை ஏற்ற தென்சூடான் அதிகாரிகள் விரைவாக ஒன்றிணைந்த அரசாங்கத்தை அமைப்பதாக உறுதியளித்தனர்.

தென் சூடானில் கடந்த 5 வருடங்களாக நிலவிய உள்நாட்டுப் போரில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

பயங்கரவாத ஒழிப்பு பொலிஸாரால்

# லண்டன் விமான நிலையத்தில் இலங்கையர்கள் நால்வர் கைது

(லண்டன்)

லண்டனில் நான்கு இலங்கையர்களை அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. லண்டன் லூடன் விமான நிலையத்தில் வைத்தே குறித்த நான்கு இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் பிரித்தானிய பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச விமானமொன்றின் மூலம் இலங்கையர்கள் நால்வரும் லண்டனின் லூடன் விமான நிலையத்தில் கடந்த புதன்கிழமை இரவு வந்திறங்கிய நிலையில் அவர்கள் நால்வரும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பான சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்ட நான்கு இலங்கையர்களும் பயங்கரவாதச் சட்டத்திற்கமைய தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர்கள் என பிரித்தானிய பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் பெட்போர்ஷெயார் பொலிஸ் நிலையத்தில் குறித்த நால்வரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# கிளிநொச்சி விவேகானந்த நகர் வீதிகளைப் பார்வையிட்ட சிறீதரன்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் விவேகானந்த நகரில் புனரமைப்புச் செய்யப்படாதுள்ள வீதிகளை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடியுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஊடாக துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கிராமிய வீதிகள் பல புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மேற்படி திட்டத்தினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் பல வீதிகள் ஒழுங்கு முறைப்படி புனரமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் போக்குவரத்துச் செய்யும் பல வீதிகள் பல வருடங்களாகப் புனரமைப்பின்றிக் காணப்படுகின்றன. இந்நிலையில் தற்போது துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தினூடாக பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்பின்றிக் காணப்படும் விவேகானந்தநகர் கிராமத்தின் வீதிகளை நேற்று முன்தினம் மாலை நேரடியாகச் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவ்வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிவித்தார். (இ)

## இராசி பலன்

**மீனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ரோக பயமுண்டு,

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், இல்லத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | செவ் | ராகு |
| சுக் | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | சந் |
| சனி, குரு, கேது | | | |

**14.04.2019**

சித்திரை 01, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

நவமி காலை 6.33 மணிவரை

தசமி பின்னிரவு 4.09 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 3.08 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

குருத்தோலை ஞாயிறு

விகாரி வருடப்பிறப்பு

வளவன்

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், உறவினர், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவர்கள்.

**கன்னி:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிலை மாற்றுப் பயிர்ச் செய்கைக்கு விவசாய அமைச்சால் 1மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாய அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் புகையிலை மாற்றுச் செய்கைக்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பணப் பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளப்பட்டுவரும் புகையிலைச் செய்கையை 2020 ஆம் ஆண்டுக்கு பின் கட்டுப்படுத்த மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந் நிலையில் புகையிலைச் செய்கையாளர்கள் பாதிக்கப்படாமல் மாற்றுப் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிக்கும் முகமாக குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் புகையிலை அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளான வேலணை, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் முதற்கட்டமாக மாற்றுப் பயிர் ஊக்குவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

புகையிலைச் செய்கைக்கு மாற்றுச் செய்கையாக மிளகாய் செய்கை, பூசணி உற்பத்தி போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இதற்காக குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 50 வீத மானிய அடிப்படையில் மிளகாய் விதை மற்றும் பூசணி சேமிப்புக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்படுவதோடு 75 வீத மானிய அடிப்படையில் குறித்த செய்கைக்கான நீர்ப்பாசனத் தொகுதியும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இத் திட்டங்கள் அனைத்தும் பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறவுள்ளது. (இ-5-10)




## தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் திணறும் சாவகச்சேரி நகரசபை

சாவகச்சேரி நகரசபையினர் பொதுச் சந்தை விவகாரத்தில் ஒரு தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் திணறி வருகின்றனர். சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்குவதா? அல்லது சபையே தொடர்ந்தும் பொறுப்பேற்று நடத்துவதா? என்பதே நகரசபையினரின் குழப்பத்திற்கு காரணம். கடந்த 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து இலாபம் இல்லாத சந்தையை குத்தகைக்கு வழங்க வேண்டும் என்ற விவாதம் சபையில் இடம்பெற்று வருகிறது. இருப்பினும் ஆளுந்தரப்பினர் சந்தையை குத்தகைக்கு கொடுக்க விரும்பாமையால் சந்தை வருமானத்தை உயர்த்த சந்தையில் சில புதிய நடைமுறைகளைப் பின்பற்றுவதாக சபையில் தீர்மானித்தனர்.

இருப்பினும் தற்போது நான்கு மாத காலமாகியும் வருமானத்தை உயர்த்துவதற்கு சபையினர் முயற்சிக்கவில்லை என சபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதன் காரணமாக கடந்த பத்தாம் திகதி இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது பெரும்பாலான உறுப்பினர்கள் சந்தையை குத்தகைக்கு கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். அத்துடன் சந்தையை குத்தகைக்கு கொடுபதா அல்லது இல்லையா என வாக்கெடுப்பும் சபையில் இடம் பெற்றது.

நகரசபையின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு குத்தகைக்கு வழங்க சம்மதம் தெரிவித்தனர். எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான ஆறு மாத காலத்திற்கு சந்தையை குத்தகைக்கு வழங்குவது என சபையில் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும் எதிர்பார்த்த வருமானம் இல்லாத போதிலும் சந்தையை குத்தகைக்கு வழங்காமல் இழுத்தடிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. சபையின் வருமானத்தை உயர்த்த வழிவகை கூறியும் சபை அதனை சரிவரச் செய்யவில்லை. ஆகவே குத்தகைக்கு கொடுப்பதனைத் தவிர வேறு வழியில்லை. குத்தகைக்கு வழங்காது விட்டால் நகரில் எந்த அபிவிருத்தியும் செய்ய இயலாது. நான்கு வருடத்தில் எதைச் செய்தீர்கள் என பொதுமக்கள் கேள்வி எழுப்புவார்கள் என ஒருசில உறுப்பினர்கள் சபையில் கருத்து வெளியிட்டுள்ளனர். அத்துடன் குத்தகைக்கு வழங்குவதனால் பொதுமக்களின் நலன் பாதிக்கப்படும் எனவும் ஒருசில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது வரை குத்தகைக்கு வழங்கப்படாத சாவகச்சேரி பொதுச் சந்தையை இந்தச் சபையினர் குத்தகைக்கு வழங்கி விட்டனர் என்ற பழிப்பெயர் தம் மீது வந்துவிடும் என தவிசாளர் உள்ளிட்டோர் அச்சம் கொள்கின்றனர். எதிர்வரும் ஜூலை மாதம் சபை தீர்மானத்திற்கு அமைவாக சந்தை குத்தகைக்கு கொடுக்கப்படுமா? அல்லது தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யப்படுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

## யோகாசன-தியான கற்கைநெறி புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன- தியான கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நல் லூர்க் கந்தன் ஆலய முன்றலில் அமைந்துள்ள நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதி நாட்களில் மட்டும் நடைபெறும் இவ்வகுப்புகள் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படும். ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30-7.30 மணிவரையிலும் பெண்களுக்கீான பிரிவு அதே தினங்களில் காலை 7.30-8.30 மணிவரையிலும் நடைபெறுவதுடன் நோயாளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

எனவே முற்றிலும் இலவசமாக நடைபெறும் இக்கற்கை நெறியில் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும் எனவும் இணைய விரும்புவோர் தமது பதிவுகளை நல் லூர் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கற்கைநெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்போ மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களை மேற்படி மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-102)



அபிவிருத்தியை நோக்கி செல்கின்ற உயரப்புல கிராம மக்களுக்கு உதவி புரிய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற இராகுலன் தனது பேரனார் அமரர் மயில்வாகனம் நினைவாக 5 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## பிரதேச சபை அனுமதியின்றி குடிநீர் எடுத்து விற்பனை!

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் அனுமதியின்றி கரந்தன் நீர்வேலிப் பகுதியில் இருந்து தனியார் நிறுவனம் ஒன்றினால் குடிநீர் எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை நடவடிக்கை இடம் பெறுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில நிலவும் வெப்பமான காலநிலையினால் குடாநாட்டின் சில பகுதிகளில் குடிநீருக்கான தேவை அதிகரித்துக் காணப்படுகிறது. இந் நிலையில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் அனுமதி இல்லாமல் தனியார் குடிநீர் வியாபார நிறுவனம் ஒன்றினால் குறித்த பகுதியில் இருந்து நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.

கடந்த ஒரு சில நாட்களாக நாள் ஒன்றிற்கு 3 தடவைகளுக்கு மேலாக குடிநீர் எடுத்துச் செல்லப்பட்டு ஏனைய பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதாக அறிய முடிகிறது.

வலி.கிழக்குப் பிரதேசம் அதிகளவிலான விவசாய நடவடிக்கைகளைக் கொண்டுள்ள பிரதேசமாகையாலும் குறித்த பிரதேச சபையின் கீழ் உள்ள அச்சுவேலி, புத்தூர் பிரதேசங்களுக்கு குடிநீர் தேவை இருக்கும் நிலையில் சபை அனுமதி இல்லாமல் குடிநீர் எடுத்துச் செல்வது சபையின் இறைமையைப் பாதிக்கும் செயலாகும். குறித்த விடயம் தொடர்பில் வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளரிடம் கேட்ட போது, காரைநகர் பிரதேச சபைக்கு மாத்திரம் இருபாலைப் பிரதேசத்திலிருந்து குடிநீர் பெறப்படுவதாகவும் வேறெந்தப் பிரதேசத்திலும் குடி நீர் பெற அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (இ-5-10)

## முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்த கசிப்பு மீட்பு! நெல்லியடி பொலிஸாரால் ஒருவர் கைது

(கரணவாய்)

வீட்டு முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரான வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கரவெட்டி காட்டுப்புலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாக நெல்லியடிப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் வீட்டு முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 30 லீற்றர் கசிப்பை மீட்டதுடன் அவ் வீட்டின் உரிமையாளரான 64 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (இ-5-60)

## பொற்பதி அறிவாலயத்தில் இரத்ததான நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் இரத்ததான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை புதுவருட தினத்தில் காலை 9 மணியவில் கொக்குவில் பொற்பதி வீதி பொற்பதி அறிவாலயத்தில் ஆரம்பமாகும். (இ-5)

## பியர் ரின்கள் எடுத்துச்சென்ற இருவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

விற்பனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட பியர் ரின்கள் மீட்கப்பட்டதுடன் அதனை எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நெல்லியடி பகுதியூடாக பியர் கடத்தப்படுவதாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் ஆட்டோ ஒன்றில் பியர் ரின்கள் எடுத்துச் சென்ற இருவரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 85 பியர் ரின்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5-60)

## வெற்றிலையின் விலை அதிகரிப்பு

(கரணவாய்)

வெற்றிலையின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்து ஐந்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

அண்மைய காலமாக ஏற்பட்டுள்ள வரட்சியால் வெற்றிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வடமராட்சியில் வெற்றிலை ஒன்று ஐந்து ரூபாவாக விற்பனைசெய்யப்படுகிறது. (இ-5-60)

## கொக்குவில் பொது நூலக சேவை நேரம் நீடிப்பு

கொக்குவில் பொது நூலகம் எதிர்வரும் வாரம் தொடக்கம் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் எஸ். தியாகமூர்த்தி தெரிவித்தார்.

இதுவரை காலமும் மாலை 5 மணிவரை திறந்திருக்கும் கொக்குவில் பொது நூலகம் தொடர்பில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வரும் வாரம் முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் என பிரதேச சபைத் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-10-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் வன்முறை; கதவை உடைத்து மெக்சிக்கோவிற்குள் நுழைந்த 350 அகதிகள்





(மெக்சிக்கோசிட்டி)

கவுதமாலாவில் இருந்து திரண்டு வந்த அகதிகளில் சுமார் 350 பேர் வன்முறையில் ஈடுபட்டு எல்லைக் கதவை உடைத்துக் கொண்டு மெக்சிக்கோவிற்குள் நுழைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

மெக்சிக்கோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக வெளிநாட்டினர் அகதிகளாக நுழைந்து வருகின்றனர். மத்திய அமெரிக்க கண்டத்திலுள்ள ஹோண்டுராஸ், கவுதமாலா மற்றும் எல் சால்வடோர் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவிற்குள் நுழைகின்றனர்.

இதைத் தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரமாகவுள்ளார். அமெரிக்காவுக்குள் வெளிநாட்டினர் நுழைவதை மெக்சிக்கோ தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் மெக்சிக்கோ எல்லை முழுவதையும் மூடி விடுவோம் என்று எச்சரித்தார்.

மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் கட்டவும் ஏற்பாடு நடைபெறுகிறது. எல்லையில் 5,800 இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இரு நாட்டு எல்லையில் காத்திருக்கும் அகதிகள் தங்களை அமெரிக்காவிற்குள் அனுமதிக்க வலியுறுத்தி வன்முறையில் ஈடுகின்றனர்.

இந்நிலையில், கவுதமாலா நாட்டில் இருந்து சுமார் 2500 அகதிகள் நேற்று முன்தினம் அதிகாலை மெக்சிக்கோவிற்கு வந்தனர். அவர்கள் நாட்டிற்கு விடாமல் மெக்சிக்கோ எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். எல்லைக் கதவு மூடப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சிலர் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர்.

மெக்சிக்கோவிற்குள் நுழைந்த சுமார் 350 பேரையும் பொலிஸார் தடுத்ததால் கடும் வன்முறையில் ஈடுபட்டனர். தெற்கு நகரமான மெடாபா டி டாமிங்கஸ் நகரிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தை தாக்கினர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எல்லையில் கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டு அகதிகள் கட்டுப்படுத்தப்பட்டனர். (இ)

# வான் - பவுசர் விபத்து; குடும்பப்பெண் உயிரிழப்பு!





(சிலாபம்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதி ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை02.45மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வான் ஒன்றும் பவுசர் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டு குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். திருமண வீடொன்றுக்கு வந்து விட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் ஆரச்சிகட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# மகிந்தவை எதிர்க்கவே ரணில் அரசிற்கு ஆதரவு

## யோகேஸ்வரன் விளக்கம்

(ஐயன்கேணி)

இம்முறை வரவு- செலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களித்திருந்தால் இரண்டு தடவைகள் மக்களால் நிராகரிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக அமைந்திருக்கும் என்பதனாலேயே அரசாங்கத்தை ஆதரித்ததாக அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு- ஐயன்கேணி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய மூலஸ்தான கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் மண்ணிலே நாம் நியாயமான அரசியல் தீர்வினைப் பெற்று சுதந்திரமாக எங்களை நாங்களே ஆளவேண்டும். தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம் என்ற ரீதியில் சகல வசதிகளும் எமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் வைத்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினோம்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியமை தொடர்பாக பலர் விமர்சனம் முன் வைக்கிறார்கள். இந்த வரவு - செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா? என் பதை தெரிவு செய்யவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது.

நாங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் செயற்படும் அதேவேளை மக்களின் அடிப் படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற வகையில் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கடந்த ஆண்டு 100 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்கள் மக்கள் நலன்களுக்காக மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்று இந்த ஆண்டு 180 மில்லியன் ரூபாய் நிதியில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் பாடசாலைகள், வீதிகள், வணக்கஸ்தலங்களின் அபிவிருத்தி செய்யப்பட்டன. வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையை மீளக் கட்டியெழுப்புவதற்கு 38 மில்லியன் டொலர் நிதி தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது.

அதற்கான நிதி வழங்குநர் விரைவில் நாட்டுக்கு வருகிறார். அதற்காக அமைச்சரவை அனுமதியை விரைவாக வழங்க வேண்டும் என பிரதமரைக் கேட்டுள்ளேன். அமைச்சர் றிசாத் பதியுதீன் அதற்கு ஆதரவு தர முன்வந்துள்ளார். தேசிய கடதாசி ஆலையைக் கட்டியெழுப்பி மூன்று இன மக்களும் தொழில் செய்யும் வகையில் நடவடிக்கை யெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)


## மணமகள் தேவை

பிறப்பு:- 1985 இந்து கௌரவ குடும்பம்
நட்சத்திரம்:- மூலம் 3ஆம் பாதம் சூரி செவ்
(லக்கினம் -01)
கி.பா:- 38 1/2
தகைமை:- Business Managment (Lon)
தொழில்:- Motor Spars Shop Stanly Rd Jaffna
இடம்:- நல்லூர்
T.P:- 076 833 7941

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L,கணக்காய்வாளர்,Qatar<br>எதிர்பார்ப்பு:A/L,உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9575 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் தொழில் உள்நாடு<br>தொ.இ: G/3889 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில், India<br>எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண் உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9577 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 26 ¾<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3888 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 12<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.Sc, M.ScTesting Engineer, UK<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உள்நாடு<br>தொ.இ: B/9580 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 73செவ் 12 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு:Doctor, Engineer உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/3901 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, Canada<br>எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி. உள்நாடு<br>தொ.இ: B/9581 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 56 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:CIMA, Charted Accountancy, Accountant<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/3905 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழிப்பு குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது

## பெக்கோ இயந்திரமும் பறிமுதல்

(குருமன்காடு)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் காடு அழிப்பில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், காடழிக்க பயன்படுத்தப்பட்ட பெக்கோ இயந்திரமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாக நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, புளியங்குளம், பழையவாடிப் பகுதியிலுள்ள பெருங்காட்டினை சிலர் பெக்கோ இயந்திரம் மூலம் அழித்து வருவதாக புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வி.எஸ்.டீ.விதானகே, எஸ்.ஐ.ரணசிங்க, பொலிஸ் அதிகாரிகளான ஜெயசூரிய மற்றும் யூட் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு சுமார் அரை ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் காடு அழிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து காடழிப்பில் ஈடுபட்ட 50, 40 மற்றும் 34 வயதுடைய மூவரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் காட்டினை அழிப்பதற்கு பயன்படுத்திய பெக்கோ இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டது..





குறித்த காடழிப்பானது உள்ளூர் அரசியல் பிரமுகர் ஒருவரின் ஆதரவுடன் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் கூறினர். கைது செய்யப்பட்ட குறித்த மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-250)

## புதுவருடத்திற்காக சென்றோர்

# காட்டுப் பகுதியில் காத்திருக்கும் நிலை



(கண்டி)

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பேருந்து இடைநடுவில் பழுதடைந்ததால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். குறித்த இ.போ.ச. பேருந்து தம்புள்ளையை அண்மித்த காட்டுப் பகுதியில் ரயர் பழுதடைந்த காரணத்தினால் இவ்வாறு இடை நடுவில் நின்றதாக பயணிகள் தெரிவித்தனர்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு குழந்தைகள் மற்றும் வயதானோர் குடும்பங்களாக குறித்த பேருந்தில் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக பயணியொருவர் தெரிவித்தார். இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# கம்பத்துடன் கப் விபத்து



(பாண்டிருப்பு)

பாண்டிருப்பில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்தோடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தின் காரணமாக வாகனத்திற்கும் இரண்டு மின்கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை 3 மணியளவில் கல்முனைக் குடி பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பை நோக்கி சென்ற கப்ரக வாகனம் ஒன்று பாண்டிருப்பு சந்தைக்கு அருகில் உள்ள இரண்டு மின்கம்பங்களில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் ஒரு மின்கம்பம் வாகனத்தின் மேல் விழுந்துள்ளது. விபத்தில் காயமடைந்த சாரதி கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாரதியின் கவனயீனம் காரணமாக இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாமென தெரிவித்த கல்முனை பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பட்டதாரிகள் தொழில் வாய்ப்பை பெருக்க மாற்றுவழிகள் தேவை

இலங்கையில் எதிர்காலத்தில் பட்டதாரிகளுக்கான தொழில் இல்லாப் பிரச்சினை பெரும் சிக்கல்களை ஏற்படுத்தப் போவது இப்போதே தெரிகின்றது. பட்டதாரிகள் தங்களுக்குத் தொழில் வழங்குமாறு குரல் எழுப்புவது நாடெங்கும் கேட்கின்றது. வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் பட்டதாரிகளின் போராட்டங்களும் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன.

இப்பிரச்சினையானது எதிர்காலத்தில் சமாளிக்க முடியாதபடி பெரும் சிக்கலாக உருவெடுக்கத்தான் போகின்றது. இந்த நெருக்கடிக்கு ஓரளவாவது தீர்வு காண்பதற்கு கடந்த கால அரசாங்கங்களிடம் எந்தவொரு உருப்படியான திட்டமும் இருந்ததில்லை. எனவே பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை உருப்பெருத்துக் கொண்டே போகின்றது.

நாடெங்கும் பல்லாயிரம் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு எதுவுமின்றி உள்ளார்கள். இவர்களில் பலர் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான வயதெல்லையையும் இவர்கள் கடந்து விடக்கூடும். அதன் பிறகு இவர்கள் தனியார் துறையில் வேலைவாய்ப்பொன்றைப் பெறுவதும் முடியாத காரியமாகிப் போய்விடும். இவர்களால் ஏதாவது சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதும் இயலாத விடயம்.

பட்டப்படிப்பை முடித்த பின்னர் கடந்த பத்து வருட காலத்துக்கு மேலாக சுயதொழில் முயற்சியொன்றுக்கு முற்படாதவர்கள் இனிமேல் அவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபடுவதற்கான சாத்தியம் இல்லை: ஆகவே இவர்களது எதிர்காலம் எவ்வாறானதாக அமையப் போகின்றது என்பது தான் பிரதான கேள்வி?

நாட்டிலுள்ள அத்தனை பட்டதாரிகளுக்கும் அரச துறையில் வேலைவாய்ப்பு வழங்குவதென் பது எந்தவொரு அரசாங்கத்தினாலும் இயலாத காரியமாகும். ஏனெ னில் அத்தனை பேருக்கும் தொழில் நியமனம் வழங்குவதற்கான வெற்றிடங்கள் அரசாங்கத்துறையில் கிடையாது. அவ்வாறான பல்லாயிரக்கணக்கானோருக்கு தொழில் நியமனங்களை வழங்கி அவர்களுக்கு வேதனம் வழங்குவதற்கு அரசாங்கத்திடம் நிதி கிடையாது.

நாட்டில் தேர்தல்கள் வருகின்ற காலத்தில் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் போவதாக அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது வழக்கமாகும். அதேசமயம் பட்டதாரிகள் அத்தனை பேருக்கும் தொழில்வாய்ப்பு வழங்கப்படு மென்ற உறுதிமொழியையும் அரசியல் கட்சிகள் வழங்குவதுண்டு. ஆனால் இவையெல்லாம் போலி வாக்குறுதிகள்!

இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டுமானால் புதிய தொழில்துறைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். இன்றைய நவீன யுகத்தை கருத்தில் கொண்டு அதிக வருமானமும் ஏராளமான தொழில்வாய்ப்புகளையும் தரக்கூடிய துறைகளில் அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டும்.

இல்லையேல் உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் துறையினர் இங்கு பாரிய தொழில் துறைகளில் முதலீடு செய்வதற்கான ஏற்பாடுகளிலாவது அரசாங்கம் ஈடுபட வேண்டும். அப்படியானால் தனியார் துறையிலாவது அதிகளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினையை பெருமளவில் குறைத்துக் கொள்வதற்கு வழியேற்படும்.

ஆனால் அவ்வாறான முயற்சிகள் கண்களுக்குத் தென்படுவதாக இல்லை. எமது நாட்டில் தனியார்துறை தொழில் வாய்ப்புகள் பெருகியிருப்பின் இத்தனை எண்ணிக்கையிலான பட்டதாரி இளைஞர்களும் யுவதிகளும் வீதியில் அமர்ந்து போரா ட்டம் நடத்த வேண்டிய நிலைமை உருவாகியிருக்காது.

இங்கு உண்மையைக் கூறுவதானால் நாட்டில் வருடா வருடம் பட்டதாரிகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகுகிறதேயொழிய, அவர்களுக்குத் தொழில் வழங்குவதற்கான வாய்ப்புகள் பெருகுவதில்லை என்பதே சரியாகும். பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் தவிர்க்க முடியாத நெருக்கடியையும் இவ் விடத்தில் குறிப்பிடாமலிருப்பது பொருத்தமல்ல. இவ்விடயத்தைப் பொறுத்தவரை பட்டதாரிகள் தரப்பிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து வெளியேறிய பின்னர் இளைஞர், யுவதிகள் பெரும்பாலானோர் எதிர்பார்ப்பது ஆசிரியத் தொழில் ஆகும். ஏனெனில் இப்பட்டதாரிகளில் கூடுதலானோர் கலைப்பட்டதாரிகளாவர். இல்லையேல் வர்த்தகத் துறையினர். இலங்கையில் உள்ள பட்டதாரிகள் வெளிநாடுகளில் உள்ளோரைப் போலன்றி அரசாங்கத்துறை வேலை வாய்ப்பில் மாத்திரமே குறியாக உள்ளனர். அதிலும் அவர்களில் பெருமளவானோரின் எதிர்பார்ப்பு ஆசிரியத் தொழில்!

அரசாங்கத் துறையில் நியமனம் பெறுவதென்பது உண்மையிலேயே இன்று சவால் நிறைந்த போராட்டமாகியிருக்கிறது. அரசாங்கத் துறையில் இவர்கள் அத்தனை பேருக்குமான ஆசிரியர் வெற்றிடங்களோ அல்லது ஏனைய பதவிகளுக்கான வெற்றிடங்களோ கிடையாது என்பதுதான் உண்மை! இவ்விடயத்தில் அரசாங்கங்கள் இழைத்த பெரும் தவறு, நாட்டில் தனியார் தொழில்துறையை ஊக்குவிக்காமல் விட்டதேயாகும்.

தனியார் தொழில் துறையை அரசு ஊக்குவிக்குமானால் பட்டதாரி இளைஞர்களில் பலர் அத்துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றிருப்பர். அரசாங்கத் தொழில் மீதான மோகமும் குறைந்திருக்கும். பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் நடவடிக்கை, தனியார் தொழில்துறையைப் பெருக்க வேண்டியதே ஆகும். அந்நடவடிக்கையானது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உதவுமென்பது உறுதி.

மொஹமட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி அதிர்ஷ்டம்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

# உங்களுக்கு தரும் புத்தாண்டு பலன்கள்

## மேடம்

இந்த விகாரி புத்தாண்டு உங்களுக்கு சமசுகம் நல்கும். வருட ஆரம்பத்தில் பொருளாதாரம் குறைவாக இருக்கும். வருட இறுதியில் நல்ல வளமானதாக மாற்றமடையும். உடல் மெலிவு காணப்படும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. சிலருக்கு இனசனம், நண்பர்களால் பொறாமைகளும் கவலைகளும் உருவாகலாம். பூமி இலாபம் உண்டாம். உங்கள் முயற்சிகளை ஆவணியின் பின் ஆரம்பிப்பது நன்மைகளை கொடுக்கும். தொழில் துறைகளில் அலைச்சல்களையும் சிலருக்கு நிம்மதிக் குறைவுகளையும் உருவாக்கலாம்.

**வைரவப் பெருமானை வணங்கி வாருங்கள். நன்மைகள் பெருகி தீமையான பலன்கள் குறைவடையும்**

## இடபம்

இந்த விகாரி வருட புத்தாண்டு உங்களுக்கு ஆரம்பத்தில் நன்மைகளை வாரிவழங்கும். புதிய வித்தை, தொழில் விருத்திகள் உருவாகும். சமூகத்தில் செல்வாக்கும், உடல் நலனும் நன்றாக அமையும். பிற தேச சஞ்சாரங்கள் நன்மைளை உருவாக்கும். வருட இறுதிப்பகுதிகளில் உங்களுக்கு அவ்வளவு நற்பலன் அமைவது கடினம். உங்கள் நடத்தைக் கோலங்களால் உங்களுக்கு நல்லதும், தீயதும் நடக்க வாய்ப்புண்டு. குருதி, மார்பு, வயிறுப்பகுதிகளில் நோய்த்தாக்கங்கள் இருக்கலாம். அவதானம் தேவை. ஏமாற்றங்கள், அவமானங்களைச் சந்திக்க நேரிடும். பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் வீண்பழி கேட்க வேண்டிவரும்.

**ஆறுமுகப் பெருமானை வணங்கி வாருங்கள். ஆறுதல் கிடைத்து சங்கடம் விலகும்**

## மிதுனம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு நன்மையான சமபலனான ஆண்டாக அமைகின்றது. ஆண்டு முற்பகுதியில் அவ்வப்போது உடல் நிலையில் தாக்கங்கள் காணப்படலாம். பொருளாதாரமும் மந்த நிலையில் இருக்கும். வருட பிற்பகுதி முன்னேற்றமாக செய்காரிய விருத்தியை உருவாக்கும் காலமாக மிளிரும். சிலருக்கு பிரதேச சஞ்சாரங்களை உருவாக்கும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. சினேகிதர், உறவினர்களிடையே மனவேறுபாடுகள் ஏற்படலாம். அவதானம் தேவை.

**விஷ்ணு பகவானை துளசியினால் அர்ச்சித்து வணங்கி வாருங்கள். துன்பங்கள் அகலும்**

## கடகம்

புலரும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைகிறது. நீங்கள் எடுக்கும் முயற்சிகள் யாவும் நன்மையாக நிறைவு பெறும். புதிய முயற்சிகளுக்கு செயல் வடிவம் கொடுப்பீர்கள். அதனால் உடல் உளரீதியாக புத்துணர்வுடன் காணப்படுவீர்கள். உங்களுக்கு பாராட்டுகள், புகழ்கள் வந்து சேரும். இல்லத்தில் சிறப்பான நிகழ்வுகள் நடந்தேறும். பொறாமைக்காரர்களிடம் அவதானமாக நடவுங்கள். திரவப் பொருட்களினால் பொருளாதார வளத்தை சிலர் பெறுவீர்கள்

**பத்திரகாளியையும், தாய்த் தெய்வங்களையும் வணங்கி அருளைப் பெறுங்கள்**

## சிங்கம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்களை வழங்கவுள்ளது. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. முன்பின் தெரியாதவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டாம். அவர்களால் அவமானம், தனநாசம் ஏற்படலாம். அவதானம் தேவை. புதிய காரியங்களில் தடைதாமதங்கள் ஏற்படலாம். பல வழிகளில் செலவுகள் அதிகரிக்கும். வருட பிற்பகுதியில் படிப்படியான முன்னேற்றங்கள் உருவாகும். பகை விலகும் ஆடை, ஆபரணச் சேர்க்கைகளும் உண்டாம்.

**சிவப்பரம்பொருளை வழிபாடாற்றி வாருங்கள். தீமைகள் அகன்று நலன்கள் கிட்டும்**

## கன்னி

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு இலாபகரமாக அமைய இருக்கின்றது. ஆயினும் ஆண்டு முற்பாகம் தடை தாமதங்களும், உடல் நலக் குறைவுகளும் இருக்கும். இவை வைகாசியின் மேல் நற்பலனாக மாறும். நண்பர், இனசன விரோதங்கள் காணப்படலாம். இதனால் குடும்ப கலகங்கள் சிலருக்கு ஏற்படலாம். அவதானம் தேவை. தருமகாரியங்களில் ஈடுபாடு பிரயாணங்களில் தடை தாமதங்கள், இடையூறுகள் சிலருக்கு ஏற்படும். கொடுக்கல் வாங்கல் விடயங்களிலும் சகோதர வழியிலும் அவதானமாக இருக்கவேண்டிய காலமாகும்.

**விஷ்ணுபகவானை வணங்கி வாருங்கள். நலன் பல பெறலாம்.**

## துலாம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைய இருக்கின்றது. எடுக்கும் காரியங்களில் வெற்றியும் காரிய அனுகூலமும் ஏற்படும். அறிவுத்திறன் மிளிரும். ஆன்றோர்களினால் பாராட்டும் நன்மதிப்பு கிட்டும். குடும்ப மகிழ்ச்சியும் காணப்படுவதோடு வெப்ப நோய்த் தாக்கங்கள் சிலருக்கு இருக்கக்கூடும். உறவுகள், நட்புக்களால் உதவி வலுப்பெற்று பிரயாணங்கள், சுபகருமங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள். திட்டமிட்ட பயணங்களால் மகிழ்ச்சி நிலையும் உருவாகும்.

**சிவசண்முகப் பெருமானை வணங்கி வாருங்கள். சங்கடங்கள் விலகி நல்வாழ்வு கிட்டும்**

## விருச்சிகம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைகின்றது. இதுவரை நீங்கள் அனுபவித்து வந்த துன்பங்கள் குறையத் தொடங்குகிறது. உங்களுக்கு இடையூறாக இருந்த சத்துருக்களை வென்று வருவீர்கள். புதிய பதவிகள், இடமாற்றங்கள் அனுகூலமாக அமையும். சிலருக்கு இனசன விரோதம், மனச்சோர்வுகள் அலைச்சல், உடல் பலவீனம், அவமானம் என்பன பிறரின் பொறாமையால் வந்து நீங்கும். அதிக செலவு இருந்தாலும் தன தானிய கஷ்டம் நிலை இருக்காது. கொடுக்கும் வாக்குறுதிகளை முன்யோசனையுடன் கொடுங்கள்.

**தூர்க்கை அம்மனை வணங்கி வாருங்கள்.துன்பங்கள் பறந்தோடும்**

## தனுசு

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு அவதானமாக இருக்க வேண்டிய ஆண்டாக அமைகிறது. உடல் நிலையில் அவ்வப்போது நோய்த் தாக்கங்கள் ஏற்படலாம். குடும்பங்களில் மன அமைதிக் குறைபாடுகள் தோன்றும். கடன்படும் நிலை உருவாகலாம். நண்பர்களிடையே கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தைக் கடைப்பிடிப்பது நன்று. அதிக செலவுகளை செய்து கடன்படும் நிலைக்கு ஆளாகாதீர்கள். பிறநாட்டுப் பயணங்கள் தூரதேசப் பயணங்கள் இழுபறியின் மத்தியில் அமையும். ஆனால் அவற்றினால் அனுகூலமான நற்பலனை எதிர்பார்ப்பது கடினம்.

**தெட்சனாமூர்த்தியையும், குருவானவர்களையும் போற்றி வணங்குகள். சங்கடங்கள் தீரும்**

## மகரம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சிறப்பான நன்மைகளை வாரி வழங்கும் ஆண்டாக அமைகிறது. இனசன கொண்டாட்டங்கள், காரிய சித்திகளையும், வெகுமதிகளையும் வழங்கும். கோபத்தைக் குறைத்து ரோகத்தில் இருந்து நிவர்த்தியாக இறைவழிபாடு செய்யுங்கள். சிலருக்கு தனித்த நிலை, அவமதிப்பு, உறவினர் நண்பர்களுக்கிடையே மனஸ்தாபம், உடல்மெலிவு, மனக்கவலை தோன்றும். இவற்றால் உங்களின் செயற்பாடுகளினால் அதன் தாக்கம் அதிகமாகவோ, குறையவோ வாய்ப்புண்டு. வெளியிடப் பிரயாணங்கள் செய்தொழில்களில் நன்மைகள் உண்டாகும். ஆடை, ஆபரண புதிய பொருள் சேர்க்கை உண்டு.

**விநாயகரை வணங்கி வாருங்கள். விக்கினங்கள் தீர்ந்து நன்மையடைவீர்கள்**

## கும்பம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு அமோக வெற்றிகளை கொடுக்கும் சிறந்த ஆண்டாக அமையப் போகின்றது. தொடங்கும் காரியங்களில் வெற்றியும் காரிய அனுகூலங்களும் ஆன்மீக யாத்திரைப் பயணங்கள் உண்டாம். தொட்டதெல்லாம் துலங்கும். உறவினர், நண்பர்களால் நன்மையும் பொருளாதார வளமும் சிறக்கும். சிலருக்கு உடல்மெலிவும் வாதநீர் ரோகங்களும் ஏற்படலாம். பரிசு பாராட்டுக்கள் கிடைக்கும். ஆன்றோரால் சிறப்பளிக்கப்படுவீர்கள். மங்களகரமான நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதல் அவற்றால் நன்மைகளும் அந்நிய தேசத்தால் நன்மைகளும் உண்டாம்.

**குருவனையும், திருவருளையும் பெற்று நல்வாழ்வு பெறுங்கள்**

## மீனம்

பிறக்கும் இந்த விகாரி சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைய இருக்கின்றது. உறவினர், நண்பர் மூலம் நல்லாதரவும், பொருளாதார வளமும் சிறப்பாக அமையும். சிலருக்கு வெளியூர்களில் இருந்து நன்மைகள், திடீர் அதிர்ஷ்டம், தனதானிய நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் நன்மை, புதிய இடமாற்றங்கள் ஏற்படுமாம். ஆன்மீக தருமச் செயல்களில் நாட்டமும் அதனால் நன்மையும் உண்டாம்.

**குருவழிபாடு நன்மையை கொடுக்கும்.**

அதிர்ஷ்டத்தைத் தரும் சகுனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### யாழ்ப்பாணம்

- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.(மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி அருகில்) 021 222 6699, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைசந்தி, தெல்லிப்பளை. 021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, போலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 4546 958
- இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்) 021 221 4488, 077 722 7740
- காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி. 021 225 2500, 076 2121 299

### வவுனியா

- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444

### மன்னார்

- 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732

### கிளிநொச்சி

- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019



### புத்தாண்டில் நலமும் வளமும் பெருகட்டும்

அன்பர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். வீணாகான குருபீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வித்தியா கணபதி பெருமானின் திருவருள் மக்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய இடர்களையும் துன்பங்களையும் நீக்கி வெற்றிக்கு உறுதுணையாக அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றோம். திருமணம், புத்திரபாக்கியம், உத்தியோகபலன், அமைதியான நல்வாழ்வு, குடும்ப உறவுகளுக்கிடையிலான ஒற்றுமை, புதபகவானின் தோஷம் இன்மை, உயர்பதவிகள் முதலானவற்றினை திருவருளாகத் தரும் சுவேதாரண்ணேஸ்ர சிவன் பிரம்மவித்தயாம்பாளின் அற்புதமான அருளினால் மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகின்றோம்.

கல்வி, கலைஞானம், ஞாபகசத்தி,பரீட்சையில் வெற்றி, போட்டிகளில் முதன்மைசித்தி, நல்லொழுக்கும் முதலானவற்றினை தன்னை நாடித்துதிப்போருக்கு திருவருளாக சுரந்துகொண்டிருக்கும் ஸ்ரீசரஸ்வதி அம்பாளின் நித்தியமான துணை கிடைத்து மாணவச் செல்வங்கள் எமது மண்ணுக்கு பெருமைசேர்த்திட வாழ்த்துகின்றோம்.

கல்வித் தெய்வமாம் ஸ்ரீஹயக்கிரீவர் அருளும் மாணவர்களின் வெற்றிக்கும் சாதனைக்கும் துணை நிற்க வேண்டுகின்றோம். நவக்கிரகநாயகர்களின் அனுகூல்யமான பார்வையினால் தோஷங்கள் அகன்று மனமகிழ்வுடன் அனைவரும் வாழ வாழ்த்துகின்றோம். வர்த்தகப்பெருமக்களின் வியாபாரம் நஷ்டமில்லாது அனுகூல்யமாக அமைவுற ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள் கிடைக்க பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். வைரவப் பெருமானின் திவ்யமான அருளால் மக்கள் அனைவரும் காக்கப்படவேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அனைத்து தெய்வங்களினதும் அருளினாலும் பெரியவர்களின் ஆசிர்வாதத்தினாலும் அனைவரும் மகிழ்வுடனும் நலனுடனும் வாழ வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றோம்.

**சபா. வாசுதேவக்குருக்கள், குருமுதல்வர்**
**வீணாகானகுருபீடம்,**
**ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச**
**திருக்கோவில், சண்டிலிப்பாய்.**

### நிலத்தில் முத்திரை பதிக்க விகாரி சித்திரைப் புத்தாண்டே வருக!

முத்திரை பதிப்பேன் என்றே
எத் திக்கும் போற்றிப் பாடிடவே
எழுகின்ற சித்திரைப் புத்தாண்டுப் பெண்ணே
பழுதிலாத அறங்களை நிலை நாட்ட
அம்மா நீ எழுந்து வருக
இப் பாரினது தலங்களுக்காய் எழுந்து வருக
கன்னித் தமிழுக்கு வளம் சேர்க்க வருக
மண்ணின் மகிழ்வுக்காகப் மங்கையே வருக
நல்லெண்ணங்களை நிறைவேற்றிட எழுந்து வருக
விகாரி சித்திரைப் புத்தாண்டே வருகவே!

மீசாலையூர் கமலா

### மலர்வாய் விகாரியே

விகாரியே எம் தமிழர்
வாழ்வுதனை விகாரமாக்கிடாது
வந்து சேர்வாய் வரமருள்வாய்
நல்ல நாடின்றி
நல்ல தேச மின்றி
நல்ல தலைவன் இன்றி
தவிக்கும் தமிழினத்திற்கு
தலை தந்து விடிவுகாட்டு
துஸ்டர்கள் ஒழிந்து போக
விகாரம் காட்டு
நல்லவர்க்கு வாழ்வளிக்க
நயப்புடன் மலர்வாய் விகாரியில்...

சபரீஷா
யாழ்ப்பாணம்.




அத்தனை கனவுகளும் நினைவாக,
சொந்தங்கள் அனைத்தும் கூடி வர,
எண்ணா உயரத்தை ஏறி பிடிக்க,
பகைகள் நீங்கி நட்பு மலர
துவங்கட்டும் இந்த புத்தாண்டு.



### பொறுமை, தர்மத்தைப் பேணுவோம்

இராமாயணம் முழுவதிலும் இராமர் பொறுமையின் வடிவமாகவே காட்சி தருகின்றார். அது அத்தனையும் நன்மையாகவே முடிகின்றது. அதேபோல் மகாபாரதத்திலும் கௌரவர்களின் சகோதரத்துவத்துக்கு எதிரான எத்தனையோ செயற்பாடுகளிலும் கூட தர்மர் மிக அதிக பொறுமையையே கடைப்பிடிக்கிறார்.

தர்மத்தை நிலை நாட்டி போரின் பின் வெற்றியையும் அடைந்தார். எனவே வாழ்க்கையில் எடுத்துக் கொண்ட காரியங்களில் வெற்றியைப் பெறுவதற்கு மற்றவர் பகைமையைப் பெறாமல் இருப்பதற்குப் பொறுமை என்பதைத் தவமாக நாம் மேற்கொள்ள வேண்டும். பிறக்கும் இப்புதிய விகாரி வருடத்திலும் தமிழ், இந்துக்களாகிய நாம் பொறுமை, தர்மம், தவம் என்பவற்றை மேற்கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோம். தற்போது எம்மைச் சூழ்ந்து நெருங்கும் இன, மத, மொழி நெருக்கடிகளிலிருந்து மீள்வோம். ஆலயங்கள் தோறும் அறத்தைப் போதிப்போம்.குடும்பத்திலும் புரிந்துணர்வுடன் வாழ்வோம்.

நல்லதொரு இனத்தை, சமூகத்தைக்கட்டி யெழுப்புவோம். மாணவர்களிடம் கல்வி ஒழுக்கம் சார்ந்த நெறிகளை வளர்ப்போம். இதற்குப்பெரியோர்கள், மத நிறுவனங்கள் வழிவகுக்க, பணி செய்ய வேண்டி புதிய விகாரி வருஷம் பிறக்கும் நாளில் பிரார்த்திப்போம். ஆலயம் சார்ந்த மதப் பெரியார்கள், சிவாச்சாரியார்கள் சைவமக்கள் அனைவரும் சேர்ந்தும், தனியாகவும், வெப்பம் தணியவும், நோய் துன்பம் நீங்கவும், நல்லொழுக்கம், சைவ கலாசாரம் சிறப்படையவும் எங்கள் எங்கள் குலதெய்வங்களை வேண்டுவோம், வழிபாடு செய்வோம். பிறக்கும் புத்தாண்டு,எல்லோருக்கும் மங்கலமாக அமைய பிரார்த்திக்கின்றோம். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

**தேசமான்ய கலாநிதி**
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
**தலைவர், சர்வதேச இந்துகுருமார்**
**ஒன்றியம்.**

### இன்பம் எய்திட எழுந்து வாராய் புத்தாண்டே

செந்தமிழர் வாழ்வு சீரோங்கி உயர்ந்திட
எந்த வேளையிலும் இன்பமே நிறைந்திட
மந்தமாருதம் வீசும் மலர்மங்கையா நீயும்
வந்தே வாழ்வளிப்பாய் வளர்மிகு சித்திரையே
பஞ்சம் பசியகன்று பாரினில் பசுமைபொங்க
நெஞ்சமதில் நிறைவான நிம்மதியும் நிறைதோங்க்
அஞ்சாமல் யாவரும் ஆனந்தமாய் வாழ்ந்திட
வஞ்சிக் கொடியே நீ வந்திடுவாய் சித்திரையே
வேண்டும் வரமெல்லாம் விகாரி வருடமதில்
ஈண்டுயாம்பெற்று இன்பமுடன் வாழ்ந்து பல
ஆண்டுகள் அவனியிலே அன்பைப் பெருக்கி நிதம்
[illegible]

வே.ராமர்



### செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு வாழ்த்து

அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. பிறக்க இருக்கும் விகாரி வருடம் எந்தவித விபரீதங்களும் இன்றி எம்மக்கள் வாழ வழிதர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பது சங்கமரபு. பழைய கோபங்களை. வளர்த்துக் கொள்ளாமல் புதிய வருடத்தில் புரிந்துணர்வோடு அனைவரும் அன்பாக வாழ முற்படுவோம்.

புதுவருட நாளில் தெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். குடும்பமாகச் சென்று மகிழ்ச்சியாக வாழ இறைவனை மன்றாடுங்கள். இப்பிறப்பு தப்பினால் எப்பிறப்பு வாய்க்குமோ பராபரமே என்ற தாயுமானவர் சுவாமிகளின் அரிய கருத்தை அனைவரும் சிந்தை கொள்ளுங்கள்.

புதிய ஆண்டில் இப்பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து நல்ல காரியங்கள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடுங்கள். குடும்பம் என்பது கடவுள் தந்த வரப்பிரசாதம். குடும்பத்துள் அன்பைப் பெருக்கி மூத்தோரின் ஆசியை எல்லோரும் பெற்றுக் கொள்ளுங்கள். உற்றார், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கூறி அனைவரது அன்பையும் பெருக்கிக் கொள்ளுங்கள். சிறைக்கூடங்களிலும் வைத்தியசாலைகளிலும் அல்லலுறுவோர்கள் விரைவில் ஆறுதல் பெற வேண்டும் என்று இந்நாளில் பிரார்த்தியுங்கள். கல்வியில் எம் சமூகம் பின்தங்கியுள்ளது என்ற சூழலை மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழையுங்கள். வீண் விபத்துக்கள் ஏற்படாமல் தத்தம் பொறுப்பை உணர்ந்து நிதானமாகப் பயணம் செய்யுங்கள். உள்ளத்தையும் ஆரோக்கியத்தையும் ஆன்மீகப் பலத்தால் அனைவரும் காத்திடுங்கள். விகாரி வருடம் எமக்கு நல்ல விடிவுகளைத் தர வேண்டும் என்று பிரார்த்தித்து அன்னை துர்க்காதேவியின் அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்தி அமைகின்றேன்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி**
**தேவஸ்தானம், தலைவர்,**
**சிவபூமி அறக்கட்டளை.**



### நிதானத்தோடு செயற் பட்டால் துன்பம் வராது

இன்று விளம்பி வருடம் விடைபெற்று புதிய விகாரி வருடம் பிறக்கின்றது. இப் புத்தாண்டில் நாம் நிதானத்தோடு செயற்பட்டால் துன்பம் வராது. திரு ஞான சம்பந்தரின் ஒரு பாட்டுக்கு மூடிக்கிடந்த ஆலயக்கதவு திறந்தது என்றால் ஆத்ம தியானத்தில் ஈடுபட்டால் அமைதி நிலவும். சீரிய ஒழுக்கத்தோடு பிரம்மஞான பேருணர்வோடு சிவனை நோக்கி வணங்கினால் இத்தகைய சூழ்நிலை மாறி விடும்.

மனிதனாகப் பிறந்த நாம் சத்தியம், தா்மம் தெரிந்து நியாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பரஜீவகாருண்ய உணர்வோடு அமைதியாக அவரவர் காரண, காரியங்களை ஆற்றிக்கொண்டு இருக்க வேண்டும். இப்பணிகளால் அவர்களுக்கு எதிர்காலத்தில் நல் வினைகள் வந்த வண்ணமிருக்கும்.

சுகம் கிடைக்கும், நற்கருமம், நற்கருணை, நற்புண்ணிய சக்திகள் இவர்களை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருக்கும். எல்லாமே அன்பு, எல்லாம் ஓம், ஓம், ஓம் என்ற ஒலியைத் தருகிறது. ஏக்கத்தில் இருந்து வருவது ஏகாஎந்தம். ஏகத்தில் இருப்பது ஏகம். அதுவே பரப்பிரம்மம். ஏகம் சந்தோசமாய் விளங்குகிறது. ஏகம் ஆனந்தமாய் விளங்குகிறது. இந்த உலகை துன்பத்தில் இருந்து மீட்க, வெப்ப நிலை குறைந்திட, விளைச்சல் பெருகிட, வாடிய பயிர்கள் வளர்ந்தோங்கி மழை பொழிந்திட, பசியில்லாமல் இந்த உலகம் அமைதியுடன் வாழ, தவசக்தி, ஜெபம், தியானம், புண்ணியம் ஆகிய நான்கு சக்திகளால் மட்டுமே முடியும்.

ஆகவே அனைவரும் தியானத்தில் ஈடுபட வேண்டும், கூட்டுப்பிரார்த்தனை செய்ய வேண்டும், எந்தச் சூழ்நிலையிலும் பாவம் செய்யாமல் இருக்க வேண்டும். பாவம் செய்தால் ஆத்ம சாதனை பலிக்காது. மௌனத்தால், நிதானத்தால் நீக்க வேண்டும், சிவ சாந்தத்தோடு இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அன்பாகிப் பழகி மற்றவர்களிடம் அன்பாக இருக்க வேண்டும். எந்த நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தாலும் அதிலிருந்து அடுத்த நிமிடம் வெளிவந்து விட வேண்டும். நிதானம் இல்லாததால் வாழ்வே வீணா கிறது.நிதானத்தோடு செயற்பட்டால் துன்பம் வராது, எது செய்தாலும் அது அர்த்தமுள்ள செயலாக இருக்க வேண் டும். இந்த விகாரி ஆண்டு உலகிற்கு நன்மை செய்யும் ஆண்டாக அமையட்டும். எல்லாம் வல்ல அம்பிகை யைப் பிரார்த்தித்து எனது உள்ளார்ந்த ஆசிகளை உலக மக்களுக்கு அன்புடன் வழங்கி நிற்கின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,**
**இந்து மத குருபீடாதிபதி, பிரதம குரு, வல்வை**
**ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானம், தர்ம**
**கர்த்தா, புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் சித்த ஆயுர்வேத சிகிச்சை

## யாழ்ப்பாண, இந்திய கேரள ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத சத்திர சிகிச்சைகளில்

1. முள்ளந்தண்டுப் பிரச்சினை (முள்ளந்தண்டு விலத்தல், தேய்வு, வெளித்தள்ளல்)
2. முறிவு நெறிவு
3. மாறாத புண்கள் (நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட புண்கள் சிறப்புச் சிகிச்சை)
4. நாளப்புடைப்புகள் (வரிக்கோஸ்)
5. மூட்டுக்களில் ஏற்படும் தேய்வு
6. குதமார்க்கத்தில் ஏற்படும் கட்டிகள், பிஸ்ரியுலா, நாடி புண்கள் (சைனஸ்)
7. மூலநோய்கள்
8. தோல்நோய்கள் ( மருத்துவ அட்டைவிடல் சிகிச்சை)
9. ஆணிக்கூடுகள் (அக்கினி கர்ம சிகிச்சை)
10. இதய அடைப்பு (இருதய நாடிகளில் ஏற்படும் படிவுகள்)
11. குதிக்கால் வாதம், மணிக்கட்டுகளில் ஏற்படும் விறைப்பு (அக்கினி கர்ம சிகிச்சை)
12. தோள் மூட்டுவலி
13. சிறுநீரகக் கற்கள்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. G.Sritharan B. S.M.S. (SL) M.Phil (Jaf) PGD. in Ayurvedic surgery (Scholar) (Kelany)**
**Reg. No. 10093**



1. பாரிசவாதம்
2. வாதரோகங்கள்
3. சர்மரோகங்கள்
4. இருமல், முட்டு .சளி, வயிற்றுப்புண், சோரியாசிஸ், மலக்கட்டு, சிறுநீரக நோய்கள்
5. மானசீகரோகம்
6. மாதர்நோய்கள்
7. மாறாத தலைவலி
8. உடல்நிறை குறைத்தல்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. (Mrs) S. Anpuchelvy B.S.M.S. (SL), M.D. (S) (India)**
**Reg. No.10434**

**பொது மருத்துவ நிபுணர்**



சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம், நரம்புத் தளர்ச்சி, பேச்சுக் குறைபாடு, கண்ணில் ஏற்படும் பாதிப்பு, காது கேட்பதில் உள்ள குறைபாடு. முள்ளந்தண்டுப் பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்ம சிகிச்சையும் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, ஆஸ்துமா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு, தலைமுடி உதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு, இருதயப் பாதிப்பு, வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது.

குறிப்பு: பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum disordres (Global Mental Disorders), Down syndrome இவற்றிற்கு சிறப்புச் சிகிச்சை நடைபெறுகிறது.

உங்கள் குழந்தைகள் எதிர்கால ஆரோக்கியமான செல்வங்கள். குழந்தைகளுக்கு இயற்கையாகவே எதிர்ப்புச் சக்தி குறைவாகக் காணப்படுவதால் அவர்களுக்கு இருமல், சளி, காய்ச்சல், வயிற்றோட்டம், சர்மநோய்கள், கணை என்பன அடிக்கடி ஏற்படுகின்றன. அவர்களுக்கு இயற்கையாகவே எதிர்ப்புச் சக்தியைக் கூட்டுவதற்கு நம் முன்னோர்கள் பயன்படுத்திய சித்த ஆயுர்வேத மருந்துகளை ஆய்வுக்குட்படுத்தி மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு தற்போது குழந்தைகளுக்கு பாணிவடிவில் மாற்றி சிறப்பான சிகிச்சைகளை சித்தமருத்துவ சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களினால் வழங்கப்படுகிறது. இவை நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி நோய்களில் இருந்து பாதுகாக்கிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195. முற்பதிவு அவசியம்.

**Herbal Health Care Centre ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்**
65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

---




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் பொருத்தமான நிபுணத்துவ தீர்வுக்கான ஒரே இடம்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்



★எல்லா அளவிலுமான வீட்டிற்கும் ,தொழிற்சாலைக்கான RO சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

★நீரின் கல்சியத்தை நீக்கி மென்மையாக்கும் (Water Softener) இயந்திரம்.

★வீடு , தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு.



★நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

இலகு தவணைக்கட்டண முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

WE ACCEPT MasterCard VISA

இல. 677, கரடிப்போக்குச் சந்தி, A9 வீதி, கிளிநொச்சி.
(hot line) 021 228 4888, 075 331 3302

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna.

---

# அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## நியூ நெல்சன் லேணர்ஸ்

## New Nelson Learners

அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்!!

89, Kandy Road,
Chundukuli,
Jaffna.
T.P : 021 222 4527,
077 358 1916,
077 790 6064
Fax : 021 222 9109

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.





### கிளைகள்

இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி. 021 222 4527, 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம். 077 715 0097, 021 492 3732

பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711, 021 492 3733

காளிகோயில் வீதி, சாவகச்சேரி. 021 492 3114, 077 761 1686

குறிகட்டுவான் வீதி, வங்களாவடி, [illegible]. 077 730 6980, ...6940

இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. 021 492 3115, 077 111 3382



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரை புதுவருட வாழ்த்துக்கள்

# UNITY PC SYSTEMS


UNITY COMPUTERS

Computer Sales, Services & Maintenance





CCTV Installation and Networking



No. 74, Palali Road,
ilupaiyadi Junction, Jaffna.
077 3 446 194,
021 222 0666
E-mail :- unitypcja@sltnet.lk

No. 394, 1/1 Galle Road,
Wellawatte, Colombo - 06
Tel :- 011 2361777,
0777 890532
E-mail :- unitypc@sltnet.lk

S.Sugumaran
Proprietor
Nivessmns@gmail.com

# மிலேனியம்

உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்

# Millennium

Guest House & Restaurants



Bedroom - 4500 /= AC / 4000/= Non A/C
4 Bed - 4000 /= AC / 3500/= Non A/C
3 Bed - 3500 /= AC / 3000/= Non A/C
2 Bed - 2500 /= AC / 2000/= Non A/C

24 Rooms உம் ஒன்றாக எடுத்தால்
3000/= படி 24 Rooms உம்





22 AC Rooms & Hall

No. 76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.
Tel :- 021 222 5876, 077 601 6310,
021 221 5195, 021 221 5196

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது
உள்ளம் கனிந்த சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019


அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# சசிகா லேணர்ஸ்

DS No - 882

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

தலைமை காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். Hotline - 077 722 6247
021 221 7678, 077 614 0361

THE SASIKA LEARNERS

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.
சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு எம்மிடம் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு பதிவுகளை மேற்கொள்வோருக்கு 15% கட்டணக் கழிவு வழங்குவதுடன் மருத்துவ சான்றிதழும் இலவசமாகப் பெற்றுத் தரப்படும்.
09.04.2019 தொடக்கம் 30.04.2019 வரை மட்டும்!!

புதிய கிளை :
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
தொ.பே. : 021 225 2333 / 071 255 4135

கிளை நிறுவனங்கள் :
மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம். 021 224 3393 / 070 301 3014
பழைய கண்டி (பிரதான வீதி), காரைநகர் 021 225 2454, 070 510 2484
வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472 / 070 301 3012
சங்கானை : ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664 / 070 301 3016


SasikaLearners
sasikadrivingschool@gmail.com

821 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 8004



Body Fat Analysis | Diet Plan | Personal Training
Tailor - Made Workout Schedule

# NORTHERN FITNESS



யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக பெண்களுக்கான உடற்பயிற்சி நிலையம் பெண் பயிற்றுவிப்பாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக ஆண், பெண் இருபாலாருக்கும்

NVQ LEVEL 4

உடற்பயிற்சி கற்கைநெறி பயின்ற பயிற்றுவிப்பாளரினால் நடாத்தப்படும் உடற்பயிற்சி நிலையம்.



*Open Daily* OPENING TIME | BOYS ONLY - 5.00 AM - 11.00 PM
LADIES ONLY - 6.00 AM - 9.00 PM

யாழ் நகரில் முதன்முறையாக பெண்களுக்கான உடற்பயிற்சி நிலையம் ஒரு கிளையையும் : ஆண்களுக்கான உடற்பயிற்சி நிலையம் இரு கிளையையும் கொண்ட ஒரே ஒரு உடற்பயிற்சி நிலையம்...

Contact Us
077 0250 339

உடல் எடை குறைத்தல் (Weight Loss)
உடல் எடை அதிகரித்தல் (Weight Gaining)
உடற்தொகுதி ஒவ்வொன்றினதும் தொழிற்பாட்டுக்கான மதிப்பீடுகள்
உடலின் கொழுப்பின் செறிவினைக் கணித்தல் (Body Fat Calculations)
நீரிழிவு, கொலஸ்ரோல், உயர் இரத்த அழுக்கம், இதய நோய்கள் போன்ற பல நோய்களை தவிர்ப்பதற்கான விசேட உடற்பயிற்சி செயற்றிட்டங்கள்
விசேட கவனிப்புடன் கூடிய தனித்தனியான உடற்பயிற்சி செயற்பாடுகள்
நவீன வசதியுடன் கூடிய உடற்பயிற்சி இயந்திரங்கள்
ஆடைமாற்றிக்கொள்வதற்கான அறைவசதிகள்
வாகன தரிப்பிட வசதி, பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டணம்.

Fitness Training | Strength Training | Fat Burning
Endurance Training | Power Training | Muscle Gaining | Weight Loss

MAIN BRANCH / 573, Manippay Road, Oddumadam, Jaffna.
2ND BRANCH / 18, Pandithar Manikka Thiagarayar Road, Chunnakam.
3RD BRANCH / 109, (In YMCA Building Ground Floor) Kandy Road, Jaffna.



அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Sunjeys A to Z Mart இல் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு 3000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு 10% கழிவு வழங்கப்படும். மேலும் 5000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு (எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு) வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

இச்சலுகை - 12.04.2019 - 20.04.2019 வரை மட்டுமே! மேலும் 3000 ரூபாயுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு கொக்குவில் மஞ்சவனபதி தீர்த்த திருவிழாவின் போது (14.09.2019) மாலை 4 மணியளவில் சீட்டிழுப்பு இடம்பெறும்.

1-ம் பரிசு - எலக்ரிக்கல் மோட்டார் சைக்கிள்
2-ம் பரிசு - இரண்டு அடுப்பு கொண்ட ஹாஸ் குக்கர்
3-ம் பரிசு - ரைஸ் குக்கர்

ஆறுதல் பரிசாக 10 வெற்றியாளர்களுக்கு 500 ரூபாய் பெறுமதியான A to Z வவுச்சர் வழங்கப்படும்.

Sunjeys A to Z Mart (Pvt) Ltd
இல.100, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 205 3077, 0777 474 111
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)



# SUNJEY'S HOLDINGS

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்



100% இயந்திர மோட்டார்

பெட்ரோல் தேவையில்லை. சூழல் மாசடையாது. எண்ணெய் மாற்றத் தேவையில்லை. புகை பரிசோதனை தேவையில்லை.

புதுவருடத்தை முன்னிட்டு

| DESCRIPTION OF BIKE | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

WE ACCEPT VISA DEBIT & CREDIT

(ஒரு முறை சார்ச்சுக்கு ஏறத்தாழ 40 கிலோமீற்றர்)

நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு
உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்

93,000/= பெறுமதியானதை 20.04.2019 வரை அல்லது கையிருப்பில் உள்ள வரை
ரூபாய் 85,000/= மட்டுமே!

இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
021 205 3077, 0777 474 111



# TKT Mark நல்லெண்ணெய்

No.1

4ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில் மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...
தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தரும்
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.



T.P : 077 832 8828, 077 652 8633, 021 225 5718


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்


# Shivahami *Mahal*









எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ். மண்ணில் ஆரம்பித்திருக்கின் றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக் கொள்ள எம்மைநாடுங்கள்!

**Adiyapatham Road, Thirunelvely,**
**021 205 2288 / 077 932 6147**
**Sivakaamymahal@gmail.com**
**www.shivahamimahal.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

AM

# அல்பா மிக்சர்



மிக்ஷர் பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை, கவர்ச்சிகரமான சம்பளமும் உணவும் வழங்கப்படும்.

தொ.பே :
**076 881 3891**

Backas Lane, Uduvil Road, Manipay.
Tel :- 021 225 5278

ඇල්ෆා මික්සර් **Alpha Mixture**

பக்கஸ் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய்.
தொலைபேசி :- 021 225 5278



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



Rube Jewellery Since 1982

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 35 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ரூபி ஜுவல்லறி




எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

எமக்கு யாழ் நகரிலோ, இலங்கையின் எப்பாகத்திலோ வேறு எந்தக் கிளைகளும் கிடையாது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074



# விக்கி லேணர்ஸ்

L LEARNER DRIVER

**Vikki Learners**

### கிளைகள்

திருநெல்வேலி
சுன்னாகம்
புத்தூர்
சுழிபுரம்
மானிப்பாய்
கொடிகாமம்

தொடர்புகளுக்கு :
021 722 3201,
077 830 8360

www.vikki learners.com



# பிரிக்கணேஷ்

## மூக்குக் கண்ணாடியகம்

நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள தேர்ந்த ஒரே ஸ்தாபனம்



நவீன ரக மூக்குக்
கண்ணாடிகளை
மிகவும் மலிவான
விலையில் பெற்றுக்
கொள்ளதேர்ந்த
ஒரே ஸ்தாபனம்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 2486

கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.



# சாரங்கா நகை மாடம்

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 6972, தொலைநகல்: 021 222 8869



**Saranka**
Nakai Maadam
Sharanga Money Exchange (pvt) Ltd.
No.157/1, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 6972, Fax: 021 222 8869.
Email:sarankajewellers@yahoo.com
Web: www.saarangajewellers.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்குகளை அடைவதற்கு இலட்சியத்துடன் ஒன்றிணைவோம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

இதுவரை நாம் அடைந்திருக்கும் வெற்றியின் பலன்களை அனுபவிப்பதோடு தேசிய இலக்குகளை அடைவதற்கு இப்புத்தாண்டில் ஒருமித்த இலட்சியத்துடன் ஒன்றிணைவோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

இப்பாரினில் ஜீவராசிகளின் இருப்பினை உறுதிப்படுத்துவதில் மிக முக்கிய காரணிகளாக விளங்கும் சூரியனையும் சந்திரனையும் பண்டுதொட்டு மக்கள் மிகுந்த பக்தி சிரத்தையோடு வழிபட்டு வருகின்றனர். அவ்வண்ணம் இயற்கையை தெய்வீகமாக மதித்தல் சாதாரண குடிமக்களினதும் அரசனதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

அவ்வழக்கத்திற்கமையவே சூரியனையும் சந்திரனையும் வழிபடுவதற்காக புத்தாண்டு காலத்தில் ஒன்றுகூடும் தமிழ், சிங்கள மக்கள் சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ இராசிக்கு பிரவேசிப்பதனை புத்தாண்டு பிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

சூரிய சங்கிராந்தியுடன் ஆரம்பமாகும் சித்திரைப் புத்தாண்டானது மனிதன் தனது சுற்றுச் சூழலையும் இயற்கையையும் வழிபடுவதற்கான வாய்ப்பாக அமைகின்ற அதேவேளை, அறுவடை செய்த விளைச்சலை இறைவனுக்கு நைவேத்தியம் செய்ததன் பின்னர் தனது உபயோகத்திற்காக வைத்துக் கொள்வதனால் மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் பரஸ்பர உறவுகள் விருத்தியடைவதுடன், மக்கள் தமது தேசிய தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் அமைகின்றது. பல சிறப்புக்களை கொண்ட இச்சித்திரை மாதத்தில் இயற்கை புத்துயிர் பெற்று பூத்துக் குலுங்குவதுடன் அது வசந்த காலத்தின் ஆரம்பமாகவும் அமைகின்றது. அவ்வாறு இயற்கை புத்தெழுச்சி பெறுவதனாலேயே நாம் இதனை புத்தாண்டாக கொண்டாடி மகிழ்கின்றோம்..

சித்திரை புத்தாண்டெனும் உயரிய கலாசார பண்டிகையானது. சந்தைப் பொருளாதார கோட்பாடுகளின் பாரிய தாக்கங்களுக்கு உள்ளாகியிருக்கும் இக்காலத்தில் அதைக் கடந்து இப்பண்டிகையின் உள்ளார்ந்த பண்புகளை புரிந்துகொள்ள முயற்சித்தல் அவசியமாகின்றது. இயற்கையின் குழந்தைகளாகிய நாமே இயற்கையை நமக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகக் கருதி அதற்கு இடையூறு செய்திருக்கின்றோம். ஆகையால் ஏற்பட்டிருக்கும் பாதகங்களை உணர்ந்து இயற்கையுடன் ஒன்றரக்கலந்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டிய ஒரு கட்டத்திலேயே இன்று நாம் அடியெடுத்து வைத்திருக்கின்றோம்.

இதுவரை நாம் அடைந்திருக்கும் வெற்றியின் பலன்களை அனுபவிப்பதோடு தேசிய இலக்குகளை அடைவதற்கு நாம் இப்புத்தாண்டில் ஒருமித்த இலட்சியத்துடன் ஒன்றிணைவோம் என உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் அதே வேளை, இச்சித்திரைப் புத்தாண்டினைக் கோலாகலமாகக் கொண்டாடும் நாட்டு மக்களுக்கும் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து இலங்கையர்களுக்கும் சௌபாக்கியமும் சமாதானமுமிக்க இனிய சித்திரைப் புத்தாண்டுக்கான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தமிழ் மக்களின் விடுதலையையும் உரிமையையும் பெற்றுக் கொடுக்க தொடர்ந்தும் உழைப்போம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் பண்டிகைகளில் ஒன்றாக சித்திரை தமிழ் புத்தாண்டும் இந்துத் தமிழ் மக்களால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

2019 ஆம் ஆண்டு பிறக்கும் விகாரி வருடம் தமிழ் மக்களுக்கு சுபீட்சமான வருடமாக அமைய வேண்டும் .

தமிழ் மக்கள் தங்கள் பண்பாட்டையும் சமய நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்காக இப் பண்டிகையை காலம் காலமாகக் கொண்டாடி வருகின்றனர். இதனால் அவர்கள் மனதில் ஆத்மீகத்தையும் மன மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

பிறக்கும் விகாரி வருடத்தில் தமிழ் மக்கள் ஒற்றுமையாய், ஒன்றுபட்ட சக்தியாய், ஒரே குரலாய் நின்று தமிழ் மக்களின் விடுதலையையும் உரிமையையும் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் உழைப்போம்.

தமிழ் மக்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம். (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மக்களுக்கு

**Yarl Smart Water Solution (Pvt) Ltd** இன்

# சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

**05** வருடங்கள்

நீர் சுத்திகரிப்பு துறையில் திறமை வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்



- உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing machines என்பன கல்சிய படிவுகளிலிருந்து விடுபட
- தொழிற்சாலைகள், உணவகங்கள், வாகன service station போன்ற இடங்களில் வெளியாகும் கழிவு நீர் பிரச்சினைகளிலிருந்து விடுபட வேண்டுமா?

நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

**Head Office:-No.319, K.K.S Road, Jaffna.**
**021 430 0044, 076 666 5267**

**Branch:-Karadippokku Junction, Kilinochchi.**
**021 430 0045, 077 033 8054**

**Hotline:- 077 057 3684, 077 473 9802 , 077 112 6410**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர் 2019



## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
## Ilankai venthan ART'S COLLEGE




அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல், திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் மற்றும் பொது வைபவங்களுக்கும்.

இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 077 754 9803

பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



## LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI (AMI METHOD) ENGLISH MEDIUM

### HURRY TO REGISTER AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS

எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM). கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உரு வாக்குதல் ஆகும்.

2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாடசாலைக்கு உள்வாங்கப் படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**OUR VISION**

To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

**OBJECTIVES**

To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.

To provide enriching strategies that would encourage students to be goal-oriented and to be self- managers.

To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion, satiating the need of the intellect, the body and the soul.

CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS

154, BROWN ROAD, JAFFNA.
TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172



## வினோ புத்தகசாலை

அதிரடி விலை குறைப்பு

புத்தகங்கள், கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக பாவனைப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்,
போட்டோகொப்பி, லெமினேற்றிங், பக்ஸ், பிறிண்டிங்,
E-mail, Scanning, பத்திரிகை விளம்பரங்கள், மின்சார பட்டியல் கொடுப்பனவுகள், Ez cash Reloads, Insurance Payments



தபாலக வீதி, முல்லைத்தீவு,
Post Office Road, Mullaitivu.
TP/Fax : 021 229 0280
Hotline : 077 998 9911,
Fb : facebook.com/vinobookcentre

## சின்னவன் வெற்றிலைகடை

மத்திய சந்தை, நெல்லியடி.

திருமண வைபவங்கள் கோயில் அபிஷேகங்களுக்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## ரவி வெற்றிலை கடை



திருமண வைபவங்கள், கோயில் அபிஷேக தேவைகளுக்காக உடன் பெற்றுக்கொள்ள முடியும்.

புதிய சந்தை, நெல்லியடி.

## கடல் பூக்கள்

பான்சி அன் கவரிங்

தேசிய லொத்தர்சபை, அபிவிருத்தி லொத்தர்சபை விற்பனை முகவர்.

T.சசிகரன்
புதியசந்தை, நெல்லியடி.
T.P : 077 175 4557



## பரமானந்தன் சிற்றுண்டி வகைகள்

கேக் வகைகள், திருமண வைபவங்கள் பிறந்தநாள் வைபவங்கள், மற்றும் பொது நிகழ்வுகளுக்கு சிறந்த முறையில் குறித்த நேரத்தில் உணவு செய்து தரப்படும்.

கம்பர்மலை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

## நியூ வசந்தா வெண்மையகம்

உரிமையாளர் - ந.ரவீந்திரன்
மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

திருமண வீட்டிற்கான சால்வை செற், தலைப்பாகை வகைகள், சிறந்த முறையில் வாடகைக்கு விடப்படும்.




## NEW AMBIGA STORES
## நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்

உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் சேவை

இல.33, பிரதான வீதி,
நெல்லியடி.
newambiga@gmail.com
Mob : 077 667 9340,
Tel : 021 226 3571,
Fax : 021 226 4197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபஸ்ரீ விகாரி வருடம் சித்திரை மாதப்பிறப்பு 14.04.2019 ஞாயிற்றுக் கிழமை பகல் 1.12 மணிக்கு, சர லக்னமான கடக இலக்னத்தில், சூரிய ஓரையில், ஆயில்ய நட்சத்திரத்தில், கடக ராசியில் பிறக்கின்றது.

லக்னாதிபதி சந்திரன் பலம்பெற்று லக்னத்திலேயே இருக்கின்றார். தனாதிபதி சூரியன் உச்சம் பெற்று குருவால் பார்க்கப்படுகின்றார். சகட யோக அமைப்போடும், சந்திரா இராசிக்கு யோகம் தரும் கிரகமான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் வீற்றிருக்கும் கிரக நிலையோடும், சகல யோகங்களையும் வழங்கப்போகும் விகாரிப் புத்தாண்டு பிறக்கிறது.

### கிரகங்களின் சஞ்சாரங்கள்

இந்த விகாரி ஆண்டில் தொடக்க நாளிலேயே குரு பகவான் அதிசார கதியில் தனுசு இராசியில் சஞ்சரிக்கின்றார்.

18.05.2019 முதல் மீண்டும் விருச்சிக இராசிக்கு வந்து 07.08.2019 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். அதன்பிறகு குருபகவான் வக்கிர நிவர்த்தியாகி 27.10.2019 வரை விருச்சிக இராசிக்குள்ளேயே உலா வருகின்றார்.

28.10.2019 இல் முறையான குருப்பெயர்ச்சி நடைபெறுகின்றது. அப்பொழுது தனுசு இராசிக்கு செல்லும் குரு பகவான் மேஷம், மிதுனம், சிம்மம் ஆகிய மூன்று இராசிகளையும் பார்த்துப் புனிதப்படுத்துகின்றார். விருச்சிகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது விருச்சிக இராசிக்காரர்களுக்கு ஜென்ம குரு நன்மையையே வழங்கும்.

விருச்சிகத்தில் குரு வீற்றிருக்கும் பொழுது ரிஷபம், கடகம், மீனம் ஆகிய மூன்று இராசிகளையும் பார்க்கின்றார். மேற்கண்ட 7 இராசிக்காரர்களுக்கும் விகாரி ஆண்டு அதிக வெற்றி வாய்ப்புக்களை வழங்கும். செல்வ விருத்தியும், செல்வாக்கும் உயரும்.

### சனி-செவ்வாய் பார்வை

இந்த விகாரி தமிழ்ப்புத்தாண்டில் 14.04.2019 முதல் 23.06.2019 வரை சனி, செவ்வாய் பார்வை உள்ளது. ரிஷபத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுதும், மிதுனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுதும் இந்தப் பார்வை உருவாகின்றது. 08.05.2019 முதல் 03.09.2019 வரையிலும் தனுசு இராசியில் சனி வக்கிரம் பெறுகின்றார்.

27.03.2020 முதல் 13.04.2020 வரை மகரத்தில் குரு நீச்சம் பெறுகின்றார். இவற்றை எல்லாம் அடிப்படையாக வைத்து ஆண்டு பலன் கணிக்கப்பட்டுள்ளது.

முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை, கிரக பார்வை காலங்களில் போராட்டமான வாழ்க்கை பூந்தோட்டமாக மாற சிறப்பு வழிபாடுகளையும், பரிகாரங்களையும் மேற்கொள்வது நல்லது.

இந்த ஆண்டு கிரக நிலைகளின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ராஜாவாக சனியும், மந்திரியாக சூரியனும், அர்க்காதிபதியாக சனியும், மேகாதிபதியாக சனியும், ஸஸ்யாதிபதியாக புதனும், சேனாதிபதியாக சனியும், இரஸாதிபதியாக சுக்கிரனும், தான்யாதிபதியாக சந்திரனும், நீரஸாதிபதியாக புதனும், பசுநாயகராக கோபாலனுமாக பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருப்பதால் அதைப் பொறுத்து மக்களுக்கு நல்ல வழி பிறக்கும்.






### அரசியலில் அதிரடி மாற்றம்

ராஜாவாக சனியும், மந்திரியாகச் சூரியனும் இருப்பதால் இந்தப் புத்தாண்டில் அரசியலில் பல அதிரடி மாற்றங்கள் ஏற்படும்.

### இயற்கை சீற்றங்கள்

உஷ்ணாதிக்க நோய்கள், நூதன நோய்கள் ஏற்பட்டாலும் அதைக் கட்டுப்படுத்த மருத்துவத்துறை எடுத்த முயற்சி வெற்றிபெறும்.

### தங்கம் விலை உயரும்

இரும்பு, இயந்திரப் பொருட்கள், [illegible] பொருட்கள் விலை உயரும். தங்கம், வெள்ளி விலை உயர்ந்து கொண்டே செல்லும். பெற்றோல், டீசல் விலை மற்றும் எரிவாயுவின் விலை ஏற்ற இறக்கமாகவே இருக்கும். பத்திரிகைத்துறை, கலைத்துறை, மருத்துவத்துறை போன்ற துறைகள் வெற்றி நடை போடும். மத்திய, மாநில அரசுகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கு கடனுதவி கிடைத்து அதன் மூலம் மக்கள் தொழிலை விரிவு செய்து கொள்ள இயலும். மக்களுக்கு பக்தி மார்க்க ஈடுபாடு அதிகரிக்கும்.

தான்யாதிபதியாக சந்திரன் இருப்பதால் தானிய அபிவிருத்தி, தாதுப் பொருட்களின் விருத்தி ஏற்படும். மளிகை, காய்கறி, கனி வகை, தானியம் போன்றவற்றின் விலை குறையும்.

எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அதை எதிர்கொள்ளும் ஆற்றலும், திறனும் மக்களுக்கு உருவாகும். தெய்வ வழிபாடுகளின் மூலம் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இந்த ஆண்டு வழி காட்டும் என்று நம்பலாம்.

### விகாரி வருட வெண்பா பாடல்

தமிழ் வருடங்கள் அறுபதில் விகாரி வருடம் பற்றி முற்காலத்தில் சொல்லப்பட்ட வருஷாதி வெண்பா பாடல் இது:

பாரவிகாரி தனிற் பாரண நீருங் குறையும்
மாரியில்லை வேளாண்மை மத்திய மாம்- சேரார்
பயம் அதியமுண்டாம் பழையோர்கள் சம்பாத்
தியவுடமை விற்றுண்பார் தேர்.

### இதன் பொருள்:

விகாரி வருடத்தில் மழை குறைவினால் குளம், கிணறு, ஆறு போன்ற நீர் நிலைகளில் தண்ணீர் குறையும். அதனால் பயிர் விளைச்சல் குறையும். வேளாண்மை திருப்திகரமாக இருக்காது. நட்புக் குறைவு ஏற்படும். ஒருவரோடு ஒருவர் சேர்ந்து பழகுவதில் பயம் அதிகம் உண்டாகும். பற்றாக்குறை அதிகரிப்பினால் நம் முன்னோர்கள் மற்றும் தாய், தந்தையர்கள் சேர்த்து வைத்துள்ள சொத்துக்களை விற்று வாழ்க்கை நடத்தும் சூழ்நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PV 94034

# 1ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை ஆங்கில மொழி மூல கற்பித்தல்

(சகல பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில்)

## பயிலுநர் ஆசிரியர்கள் 300 பேர் இணைத்துக்கொள்ளல்

வருட காலமாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்காக ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்பாடுகளை மாத்திரம் மேற்கண்ட எமது நிறுவனம் இலங்கையினுள் ஆங்கில மொழியை கையாளும் பொழுது மற்றும் கற்பிக்கும் பொழுது ஆசிரியர்கள் செய்யும் குறைப்பாடுகளை நன்றாக அறிந்து வைத்துள்ளதுடன் அதற்காக ஒரு தீர்வினை தேடும் முகமாக இளைய சக்திகளை வலுப்படுத்துவதை நோக்காகக்கொண்டு இலங்கையினுள் எமது கிளைகள் 40 ஆரம்பிப்பதற்காகவும் அதற்காக

**புதிய ஆசிரியர்கள் 300 பேர் இணைத்துக்கொள்ளப்படுகிறார்கள்.**

### தகைமைகள்

- 18-35 வயதிற்கிடைப்பட்ட க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தியடைந்த மற்றும் க.பொ.த. (உ/த) சித்தியடைந்த சகல இலங்கை வாழ் இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
- ஒரு நாள் செயலமர்வின் பின் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் எமது களனி பயிற்சிநிலையத்தில் மாத பயிற்சிக்கு தயார்ப்படுத்தப்படுவார்கள்.

**ஆங்கிலத்தில் தேர்ச்சிஇல்லாதவர்கள் தளர்ச்சி கொள்ளத்தேவையில்லை.**
**60 நாட்கள் ஆங்கில டிப்ளோமா பாடநெறி இலவசமாக கற்றுத்தரப்படும்.**

**பயிற்சி வாரம் ஒன்றுக்கு 5 நாள் வீதம் மாதம் தொடர்ச்சியாக**

- பயிற்சிக்காலத்தின் போது நிறுவனத்தில் பாடவிதானங்கள்,மொழித்தேர்ச்சி நவீன சூழலில் கற்பித்தல் மற்றும் நடத்தைகள், தலைமைத்துவம் வெளி மற்றும் உள்ளார்ந்த ஆளுமை, செயன் முறை கற்பித்தல் தொடர்பான போதியளவு பயிற்சிக்கு உள்ளடக்கப்படுவர்.
- உங்கள் விண்ணப்பத்தினை சுயமுகவரி எழுதிய (9x4) அளவுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரை ஒட்டி மேலதிக கடித உறையுடன் உங்கள் சுயவிபரக்கோவையுடன் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ஆண்டு 1 - 11 வரை ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளல் எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.
- பயிற்சியை நிறைவு செய்யும் சகல ஆசிரியர்களுக்கும் எமது நிறுவனத்தினால் ரூபா 22,500/= பெற்றுக்கொடுப்பதுடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்கள் காலை 8.00 மணி முதல் மாலை மணிவரை வேலைநேரமாகும்.

Registrar
Blooming Buds International E-Campus
Teacher's Training School
No.40, Kandy Road, Thalugama, Keleni.

துரித அழைப்பு
0715 669641

Tel: 0112 912641 / 0754 933349
www.bloomingbudsecampus.com
facebook.com/bloomingbudsinternational ecampus

Registrar
Blooming Buds International
E-Campus Teacher's Training Schoo
43, Darawalla Road,
Dickoya, Hatton.
Tel: 051 222 2741

# களனி B.B.I.E. Campus நடத்தும்

## 20 நாள் ஆங்கில பேச்சு

தங்குமிட பயிற்சி **களனியில்...**

**உயரிய நம்பிக்கையுடன்**

O/L, A/L பரீட்சை எழுதியவர்கள், வயது வந்தவர்கள், தொழில் பார்ப்போர் மற்றும் வெளிநாடு செல்ல விரும்புவோருக்கான

- உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழக ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகிறது.
- வசதியான, பாதுகாப்பான தங்குமிடவசதி (ஆண்கள்/பெண்கள்)
- காலை 8.30 இலிருந்து இரவு 10.30 வரை பல்வேறு செயற்பாடுகளினூடாக வாக்கிய அமைப்பு மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சியுடன் தெளிவுபடுத்தல்
- 20 மாணவர்கள் கொண்ட குழுவாக உங்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி கற்பிக்கப்படும்.
- குறுகிய காலத்தில் கூடுதலான மணி நேரங்களைக்கொண்ட துரிதமாக ஆங்கிலத்தை பேசுவதற்கு பயிற்சியளித்து விஷேட ஊக்குவிப்பை வழங்குவோம்.
- வெற்றிகரமாக கற்கை நெறியை பூர்த்தி செய்யும் உங்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

கற்கைக்நெறிக்கட்டணம், உணவு / தங்குமிடத்துடன் **22,900/- மட்டுமே**

துரித அழைப்பு : 071 5669641
www.bloomingbudsecampus.com
Facebook.com/bloomingbuds international ecampus

இல. 40, கண்டி வீதி, தளுகம, களனி
0112-912641 / 0754 - 933349
Hatton Branch : No. 43, Darawela Rd, Dickoya Tele : 051 2222741

# B.B.I Evangelical School

24 மணித்தியாலம் செபமாலை சொல்லப்படும்

புனித கிறிஸ்தவ வேதாகமத்தைக் கற்று தினமும் ஏனைய மக்களின் எண்ணங்கள், தேவைகள் மற்றும் சுக துக்கங்களுக்காகப் பிரார்த்தனை செய்வதற்கு விரும்பும் இளைஞர்களுக்கான அழைப்பு !

புனித வேதாகமத்தைக் கற்பதுடன் ஆங்கில மொழியும் கற்றுத்தரப்படும். உணவு, தங்குமிடம் மற்றும் பாடநெறிகள் அனைத்தும் இலவசம்.

தேவ சேவையானது பரலோகத்திலும் இந்த உலக வாழ்விலும் உங்களை உன்னதமடையச் செய்யும்.

**தொடர்புகளுக்கு :**
071 566 96 41, 077 152 97 31

உங்களுடைய பிரார்த்தனை வேண்டுதலை மேற்படி இலக்கங்கள் மூலம் தெரிவிக்க முடியும்

**B.B.I.E Campus**
No 40, Kandy Road, Dalugama, Kelaniya.
Email : jayalathd@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சதுரங்கப் போட்டி யாழ், கிளிநொச்சி அணிகள் சம்பியன்



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.

இதன்மூலம் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி பங்குபற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கடந்த 5, 6 ஆம் திகதிகளில் நடைபெற்ற போட்டியில் மாவட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து அணிகள் பங்குபற்றிய இப்போட்டியானது "றவுண்ட றொபின்" முறையில் நடைபெற்றன.

இப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியானது மற்றைய நான்கு மாவட்ட அணிகளையும் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது.

கடந்த மூன்று ஆண்டுகளாக இரண்டாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி அணி இம்முறை சம்பியனானது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்ட அணியும் மூன்றாம் இடத்தை மன்னார் மாவட்ட அணியும் பெற்றுக்கொண்டன.

ஆண்கள் அணிக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்ட அணியும் இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணியும் மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணியும் பெற்றுக்கொண்டன.

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கமானது மீள்குடியேற்றத்தின் பின்னர் முனைப்புடன் செயற்பட்டு மாவட்ட மட்டத்தில் பல்வேறு போட்டிகளை நடத்தி வருவதுடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் தமது மாவட்ட சதுரங்க வீரர்களை பங்குபற்றச்செய்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## யாழ். பிரதேச செயலக உதைபந்தாட்டம் பாசையூர் சென். அன்ரனிஸ் சம்பியன்



யாழ். பிரதேச செயலகம் நடத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பாடும் மீன் அணியை வென்று பாசையூர் சென். அன்ரனிஸ் அணி சம்பியனானது.

கடந்த 11 ஆம் திகதி துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்றது.

இடைவேளைக்கு முன்னதாக சென். அன்ரனிஸ் அணியினர் 01 கோல் போட்டனர். தொடர்ந்து இடைவேளைக்குப்பின் இருபகுதியினரும் சளைக்காது விளையாடினர். தண்ட உதை சந்தர்ப்பம் பாடும் மீன் அணிக்கு கிடைக்கவே பாடும்மீன் அணியினால் ஒரு கோல் போடப்பட்டது. ஆட்டம் சம நிலையில் முடிவடைய வெற்றியைத் தீர்மானிக்கும் தண்ட உதை வழங்கப்பட 3-1 என்ற கோல் கணக்கில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி வெற்றியை தனதாக்கியதுடன் சம்பியன் பட்டத்தையும் வென்றது. (க-106)

## கைதடி வளர்மதியின் தாச்சிப் போட்டி முடிவுகள்

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியான தாச்சிச் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டியில் புதுமடம் வைகரை அணியை எதிர்த்து சுதுமலைநாவலர்அணி மோதியது. வழங்கப்பட்ட நேரம் முடிவில் இரு அணிகளும் தலா 4 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன. எனவே மேலதிகமாக 5 நிமிடம் வழங்கப்பட்டது.

அதிலும் இரு அணிகளும் தலா ஒரு புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன.

இரு அணியினரின் முடிவுடன் போட்டி மறுபடியும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (க)

## கரவெட்டி பிரதேச செயலக உதைபந்தாட்டம் நவிண்டில் கலைமதி அணி சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில்நவிண்டில் கலைமதி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில்நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இரு அணிகளின் ஆட்டமும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரு அணிகளும் எப்படியாவது ஒரு கோலினையாவது போட வேண்டும் என பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இரு அணிகளாலும் இடைவேளைக்கு முன்னர் கோல்களைப் போட முடியவில்லை. தொடர்ந்து இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் நியூட்டன் அணி முன்கள வீரன் தர்மிகன் தனது அணிக்கான கோலினை போட்டு கலைமதி அணியை அதிர்ச்சியூட்டனார். இருப்பினும் 20ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் மத்தியகள வீரன் ரதீசன் கோல் ஒன்றைப்போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார். இறுதியில் போட்டியானது 1:1 என்ற சமநிலையில் முடிவடைய சமநிலை தவிர்ப்பு உதையில் 3:1 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ரீதியான உரிமைகள் கிடைக்கப்பெற்ற ஒரு வருடமாக இவ்வருடம் அமைய வேண்டும்

2019 ஆம் ஆண்டிலே, மலரும் தமிழ்-சிங்கள புத்தாண்டை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

போருக்குப் பின் பத்தாண்டுகள் கடந்து செல்கின்ற இந்த நிலையில் சமுதாய, கலாசார, அரசியல் ரீதியாக ஒவ்வொருவருடைய உரிமைகளும், பொறுப்புக்களும், கிடைக்கப்பெற வேண்டிய ஒரு வருடமாக அமைய வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.

எமது மக்கள் எல்லோரும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையும், இலங்கை ஒரு சுபீட்சமடைந்த தேசமாகவும் மாறுவதற்கான வாய்ப்புக்களுக்கான அடித்தளம் எடுக்கக்கூடிய ஒரு வருடமாகவும் இப்புத்தாண்டு மலரட்டும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதிக்கும் ஏனைய அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் மலரும் புத்தாண்டு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமைய பிரார்த்திக்கிறேன்.

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.



கலாநிதி சுரேன் ராகவன்
ஆளுநர், வடமாகாணம்

# தாயக தேசத்தின் விடிவொன்றே தமிழ் மக்களின் புத்தாண்டாகும்

வாழ்வெங்கும் வலிகளும் வதைகளும் சுமந்த எமது மக்களின் காலத்துயர்கள் யாவும் இரத்தப்பலிகளைத் தந்து மெல்லென அகன்று சென்றாலும், எமது மக்கள் சுமந்து நடந்த துயர்களுக்கு பரிகாரமாக நிரந்தர அரசியல் தீர்வொன்றை நாம் வென்றெடுப்பதே பிறந்திருக்கும் தமிழ்-சிங்கள புத்தாண்டின் நீடித்த மகிழ்வாகும்.

அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு. அபிவிருத்தியில் தமிழர் தாயகம் செழித்தெழும் தீர்வு. அரசியல் உரிமைக்கு நிரந்தரத்தீர்வு இவைகளே எமதும், எமது மக்களினதும் ஆழ்மன விருப்பங்களின் கனவுகளாகும், இவைகளை பேரம் பேசி பெறுவதற்கான போதிய அரசியல் பலத்தை தம்மிடம் வைத்திருந்தும், ஐ.நாவையும், சர்வதேச சமூகத்தையும் காட்டி எமது மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிவரும் சக தமிழ் தரப்பினர் எமது மக்களுக்கு புத்தாண்டின் மகிழ்ச்சியை ஒரு போதும் தரப்போவதில்லை.

ஜனநாயகத்தை பாதுகாப்பதாக போலிக்கூச்சலிட்டு மகிந்த எதிர்ப்பை சுய இலாபங்களுக்காகாக காட்டி சூளுரைத்தவர்கள் மறுபுறத்தில் தாமே தக்கவைத்தோம் என்று தம்பட்டம் அடித்து காப்பாற்றியதாக கூறும் அரசை கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு துரும்பைக்கூட பெற்றுக்கொடுக்கவில்லை.

தமிழ்- சிங்கள மக்கள் சேர்ந்து கொண்டாடும் சித்திரைப் புத்தாண்டின் மகிழ்வானது. இலங்கைத்தீவின் தேசிய இனங்களின் சமத்துவ அரசியல் உரிமையை வழங்குவதால் மட்டுமே அர்த்தபூர்வமானதாக இருக்கும். ஆகவே தமிழர் தேசத்தின்



அரசியல் மாற்றமொன்றே எமது மக்களின் புத்தாண்டு வரவுகளின் புது மகிழ்வு என்பதை வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய எதிர்கால நம்பிக்கையோடு பிறந்திருக்கும் தமிழ்-சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

டக்ளஸ் தேவானந்தா
நாடாளுமன்ற உறுப்பினர்

# நிரந்தர அமைதியும் நீதியும் நாட்டில் நிலைநாட்டப்படட்டும்

தமிழ்-சிங்கள புத்தாண்டினைக் கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எமது நாட்டில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் சித்திரைப் புத்தாண்டானது நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு என்பவை இந்த இரு சமூகங்களுக்கும் இடையில் மேம்பட கிடைக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாதமான பண்டிகையாகும்.

துரதிர்ஷ்டவசமாக எமது நாட்டில் அத்தகைய நம்பிக்கையை கடந்த காலங்களில் கட்டியெழுப்ப முடியவில்லை. அதன் விளைவாக இன்றும் மக்கள் பல்வேறு துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகிறார்கள். அதுமாத்திரமன்றி இரு சமூகங்களுக்குமிடையிலான விரிசல் அதிகரித்துள்ளதேயன்றி குறையவில்லை.

எம்மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறப்பெற்று இந்த நாட்டில் நிரந்தர அமைதியும் நீதியும் நிலை நாட்டப்பட நாம் இந்த நன்னாளில் இறைவனை வேண்டுவோமாக.

மேலும் இந்தப் புத்தாண்டு நாளில், அற்ப அரசியல் இலாபங்களைக் கருத்திற் கொள்ளாது, எமது நாட்டினை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் ஒரே நோக்கத்தோடு, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு



காண முன்வர வேண்டும் என இந் நாட்டின் அரசியல் தலைவர்களை அழைத்து நிற்க விரும்புகின்றேன். எமது எதிர்கால சந்ததியினருக்கு வளம்மிக்கதும், நீதியையும், நேர்மையினையும் நிலைநாட்டும் ஒரு இலங்கைத் தீவினை உருவாக்குவது எமது கடமையாகும். எனவே இந்த சித்திரைப் புத்தாண்டு நாளில் இந்தத் தலையாய கருமத்தினை நிறைவேற்ற இன, மத, கட்சி, வேறுபாடின்றி உழைக்க முன்வருமாறு அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

வளமானதும் செழிப்பானதுமான ஆண்டாக இந்த ஆண்டு அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இரா.சம்பந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்

# எம் மத்தியிலுள்ள வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும்

இன்று மலரும் விகாரி வருடம் எம் மத்தியிலுள்ள வேற்றுமைகளை நீக்கி, ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். கடந்த காலங்களில் நடந்தேறிய துன்பங்களையும், துயரங்களையும் மறந்திடுவோம்.

விகாரியைத் தொடர்ந்துவரும் காலம் மக்கள் மனதில் மகிழ்வுடையதாக அமையட்டும் என வாழ்த்தி எனது புதுவருட வாழ்த்தினைத் தெரியப்படுத்துகின்றேன்.

சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் வாழும் ஈரின மக்களாகிய தமிழர்களில் இந்துக்களுக்கும், சிங்களவர்களுள் புத்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் பொதுப் பண்டிகையாகவுள்ளது.

எனவே இது ஒரு தேசிய திருநாளாகும். எனவே நாடெங்கும் அமைதி நிலவ வேண்டுமென இந்த புனித நாளில் இறைவனை வேண்டுகின்றேன்.



அனைவரும் வாழ்க வளமுடன்.

இம்மானுவேல் ஆனல்ட்
யாழ்.மாநகர முதல்வர்

# எமது செயற்பாடுகளில் புதியவற்றை தோற்றம் பெறச்செய்ய வேண்டும்

சிறந்ததும், மனப்பூர்வமானதுமான மாற்றங்களை ஆக்கபூர்வமாக ஏற்படுத்தி பிறந்திருக்கும் வருடத்தில், நாமும் நமது சிந்தனைகளில், எண்ணங்களில், செயற்பாடுகளில் புதியவற்றினை தோற்றம் பெற செய்ய வேண்டும்.

இத் தலைமுறையினர் யதார்த்தமான சிந்தனைகளை ஏற்படுத்துபவர்களாகவும், அவற்றிற்கு முதலிடம் வழங்குபவர்களாகவும் உள்ளனர். நாம் எமது பாரம்பரியமிக்க கலை, கலாசார.பண்பாடுகளின் ஊடாகவும் அவற்றினை மிளிரச் செய்து, நிகழ்காலத்திலும் பாரம்பரியங்களினூடாகப் புதியனவற்றை பரிணமிக்க செய்ய வேண்டும்.

பிறந்திருக்கும் விகாரி புதுவருடம் அனைவருக்கும் சுபீட்சம் மிக்கதாக அமைய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன்.

நமது முன்னோர்களின் வழிகாட்டலில் நீண்டகாலமாக எம்மால் பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரியங்களும் முன்னோர்களின் ஆசீர்வாதமும் அனைவருக்கும் புத்தெழுச்சியை வழங்க தொடர்ந்தும் நாம் புதிதாக பிறக்கும் வழிகளை தேர்ந்தெடுக்க வேண்டும்.



பிறக்கும் வருடத்தை நம்பிக்கையோடும் பல்வேறு எதிர்பார்புக்களோடும் நோக்குகின்றோம். தோற்றம் பெறும் ஒவ்வொரு விடயங்களும் தாக்கங்களுக்கான மறுதாக்கங்களையும் ஏற்படுத்தும். எனவே நமக்கு ஒவ்வாத விடயங்களை புதிய நாட்களில், புதிய நம் பயணங்களில் புறம் அகற்றி ஒதுக்கி கொள்வது வரவேற்கப்பட வேண்டியது.

சிறந்த அறுவடைகளை பெற்று கொண்டாடும் இப் புதிய வருடம் நமது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் ஆண்டாக அமை வதற்கு, நாம் நமது முயற்சிகளை சாதகமாக்கி உயிர்ப்புமிக்கதாக்குவோம்.

அங்கஜன் இராமநாதன்
நாடாளுமன்ற உறுப்பினர்



புத்தாண்டில் புதுமைகள்
தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும்
இன்னிசை முழங்கட்டும்
எல்லோர் வாழ்விலும்
மகிழ்ச்சி நிலைக்கட்டும்

இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

# தமிழர் சமூகம் கண்ணீரைத் துடைத்துவிட்டு நம்பிக்கையுடன் புதுவாழ்வுபெற வேண்டும்

தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் சித்திரைப் புத்தாண்டு சிறப்புக் கொண்டாட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றது. தைப் பொங்கல் விழா நிறைவுற்று புத்தாண்டைக் கொண்டாடும் மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

இலங்கைத் தமிழர் வாழ்வில் இவ் விழாக் காலங்களை மன மகிழ்வுடன் கொண்டாடும் மன நிலையில்லாத, துன்ப துயரங்களில் வீழ்ந்து கிடக்கும் மக்கள், குடும்பங்களையும் மனதிற் கொள்ள வேண்டும். தமிழின விடுதலைக்காகத் தம்முயிர்களைப் பலிகொடுத்தோரும், அர்ப்பணித்தோரும் நிறைந்து கண்ணீருடன் விடுதலையோ, விடிவோ இன்றி வாழும் குடும்பங்கள் நிறைந்த தமிழர் சமூகம் கண்ணீரைத் துடைத்து விட்டு, நம்பிக்கையிழந்து விடாமல் புதுவாழ்வை மனதில் கொண்டு பிரார்த்திக்க வேண்டும். எதிர்காலச் சந்ததி நம்பிக்கையுடன் புதுவாழ்வு பெறவேண்டும்.

இவ்வாண்டு எதிர்காலம் இலங்கை அரசியலில் பல நெருக்கடிகளை, மாற்றங்களை எதிர் கொண்டிருக்கப் போகிறது. தமிழ் மக்களும் தமிழின விடுதலைக்கு ஒன்றுபட்ட நிலைப்பாடுகளையும் அடுத்த கட்டத் தீர்மானங்களையும் எடுக்க வேண்டிய தேவையும் தருணங்களும்



ஏற்பட்டு வருகின்றது.

எவ்வாறெனினும் தமிழர் பண்பாடு பாரம்பரியங்களைப் போற்றிப் பேணிப் பாதுகாப்பது மீண்டெழுவது எம் கடன் எனத் திட சங்கற்பம் கொள்வோம் என வேண்டிநிற்கின்றேன்.

மாவை.சேனாதிராசா
பாராளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானிப்பாய் மருதடி விநாயகர்

## தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## இன்று 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை

### தேரேறிவரும் ஆனைமுகன் பாதம் பணிவோம்

வேதங்களாலும் ஆகமங்களாலும் ஞானிகளாலும் போற்றித் துதிக்கின்ற விநாயகப்பெருமான் ஆயிரத்து ஐந் நூறு வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பா ணத்தை ஆண்ட தமிழரசர் காலத்தி லேயே ஓர் தவசிரேஷ்ட ஞானியால் இப்போது இருக்கும் மருத மரத்தடியில் வைத்து பூஜிக்கப் பெற்றவராவார்.

இம் மரத்தடியில் பூஜிக்கப் பெற்ற விநாயகப் பெருமான் அத்தவஞானி யின் பூஜை சிறப்பால் பெரும் கோயில் கொண்டு பல்லாயிரக்கணக்கான அடிய வர்களை காத்து அருள்மாரி பொழிகிறார். கடந்த 2004 ஆம் ஆண்டு ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப் பெற்று கருங் கற் திருப்பணி வேலைகள் நடைபெற்று கடந்த 2015 ஆம் ஆண்டு மஹாகும் பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிரு ந்து புதுப்பொலிவோடு ஆலயம் மிளிர் கின்றது. கடந்த 2015 ஆம் ஆண்டிலி ருந்து 25 தினங்கள் மஹோற்சவம் நடைபெறுவது மேலும் சிறப்பு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒரு ங்கே அமைந்த இத்தலத் தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது. சித்திரத் தேரிலே சிங் காரப் பவனிவரும் ஐந்து கரத்தான் அருள் பொழியும் முகமாக ஐந்து முகமும் பத் துக் கரங்களும் கொண்டு தெய்வீகப் பொலிவோடு ரத மேறி வரும் காட்சி யைக் காண இரு கண்களும் போதாது.

அக் காட்சியை எல்லோரும் கண்டு பேரானந்தப் பெருவாழ்வு எய்துவதோடு எல்லோரும் சீரும் சிறப்புமாக, ஒற்று மையாக, சமாதானமாக வாழ எல்லோ ருக்கும் நல்ல மனதைக் கொடுக்க வேண் டும் மருதடியானே என இறைஞ்சி ஆசி கூறி அமைகிறேன்.

**சிவஸ்ரீ.ப.ஜெயகுமாரக்குருக்கள்**
**பிரதம குரு,**
**மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**

### ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் அரசர்களால் அரசாளப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவ ஆலயங் களை அமைத்து வேதசிவாகமங்களையும் கற்றுணர்ந்த ஒழுக்க நெறி தவறாத சைவ அந்தணர்களை நியமித்து, அத்திருக்கோயில் களில் நித்திய, நைமித்திய பூசைகளை நிய மந்தவறாது செய்து வந்தனர். இத்திருத்த லங்களின் முன்னேற்றத்துக்காக சைவாபிமா னிகளும் தனவந்தர்களும் அறிஞர்களும் ஆவன செய்தும் சமய வளர்ச்சிக்கு ஊக்க மளித்து வந்தனர். அதனால் ஆலயங்கள் எல்லாம் பெருஞ்சிறப்புற்று விளங்கின. அதே போன்று தமிழரசர்களின் ஆதரவும் பெரு மளவு கிடைத்தது.

இவ்வாலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் யோக நிஷ்டை கைவ ந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூசித்து வந்த புண்ணியஸ்தலம் என்று ஒரு வரலாறு உண்டு. அவரது நியமந்தவறாது வேதமந்திர சக்தியின் சாந்நித்தியத்தால் மருதடி விநாயகர் ஆலயம் மகத்துவமுடையதாயிற்று.

பெருந்திரளென மக்கள் வந்து வணங்கி விநா யகரின் அருள் பெற்றனர். இவ்வாலயத்தின் தென் திசையில் அமைந்த திருக்குளம் பிள் ளையார்குளம் என்னும் பெயருடையதாயிற்று என்றும் அவ் வரலாறு கூறுகிறது. இவ்வாறாக சைவர்கள் வாழும் காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் இலங்கையின் ஆட்சியை கைப்பற்றியதும் தமிழரசர்களின் ஆட்சி முடிவு ற்றது. ஆட்சியை கைப்பற்றிய பறங்கியர்க ளால் சைவ ஆலயங்கள் பல இடித்து தரை மட்டமாக்கப்பட்டன. கத் தோலிக்க மதத்தை தழுவுமாறு தமிழ் மக் களை துன்புறுத்தினர்.

கோவில்களை தகர்த்தால் சைவர்கள் சிவ நெறியை மறந்து தங்கள் சமயத்தை தழுவுவார் கள் என பறங்கியர்கள் எண்ணினர். அவர் கள் எண்ணியதற்கு மாறாக தமிழ் மக்கள் சிவ நெறி வழிபாட்டில் ஊன்றிய பக்தி சிரத்தை உடையவராயினர். பூசைகள், பொங்கல்கள் வழி பாடுகளிலும் பறங்கியர் அறியா வண்ணம் நிகழ்த்தி வந்தனர். பறங்கியரின் ஆட்சி நெடுங் காலம் நிலைக்கவில்லை. இலங்கையின் ஆட்சியை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

ஒல்லாந்தர் தமது கிறிஸ்தவ மதத்தை பரப்புவதில் ஊக்கம் செலுத்தாது பொருளீட்டு வதில் கண்ணாயிருந்தனர். இக்காலத்தில் தமிழ் நாட்டில் தொண்டை மண்டலத்தில் நிகழ் ந்த அரச கலகம் ஒன்றுக்கு அஞ்சி பல குடும் பங்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களில் குடியமர்ந்து வாழ்ந்தனர். அவர்களுள் தியா கராச குருக்கள் என்பவர் மானிப்பாயை அடுத் துள்ள நவாலி ஊரில் வைரவர் கோயில் ஒன் றில் அட்சகராக நியமிக்கப்பட்டார். இப்ப ணியை இவர் மேற்கொள்ளும் பொழுது அவ் வூர் வாசிகள் சிலர் சைவநெறிக்கு ஒவ்வாத சில காரியங்களை கோயில் வாயிலில் செய் தனர். இச் செயலை காணப்பொறுக்க மாட்டாத வராய் அவ்விடத்தை விட்டகன்று கிழக்கு திசையை நோக்கிச் சென்றார். ஓரிடத்தில் மரு தமரு சோலையும் பிள்ளையார் குளமும் இரு ப்பதைக் கண்டார். அவ்விடத்தில் பொங்கல் பூசை கள் நடைபெறுவதைக் கண்டார். அக்காட்சி அவரை கவர்ந்தது. இறைவன் திருக்குறிப் பின் பயனால் சிவயோகியார் ஒருவர் முன்னர் பூசித்து வந்த விநாயகர் ஆலயம் அவ்விடத்தில் இருந்ததை உணர்ந்தார். தான் அறிந்த திருக்குறிப்பை அங்குள்ள மக்களிடம் எடுத்துரைத்தார். இதை அறிந்த அடியார் கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அவ்விட த்தில் மீண்டும் ஓர் ஆலயம் அமைத்து விநாயக விக்கிரக பிரதிஷ்டை செய்து தியாகராச குருக்கள் அதில் அட்சகரானார்.

அடியார்களின் ஆதரவால் இவ் ஆல யம் மென்மேலும் வளர்ச்சி பெற்றது. இவ் வேளை ஒல்லாந்தர் ஆட்சி முடிவடைந்து இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றி ஆட்சி நடத்தினர். ஆங்கிலேயர் கிறிஸ்தவ நெறியை பரப்புவதில் முனைப்பாக இருந் தாலும் பிற சமயத்தவரின் வழிபாட்டு சுதந்திரத்தை பிற சமயத்தவர்களுக்கு கொடுத்தனர். அதனால் அழிந்து போன திருத்தலங்கள் மீண்டும் நிர்மாணிக்கப் பட்டன. தனவந்தர்கள், அடியார்கள், திருப் பணி வேலைகளை செய்வதில் மிக ஆர் வம் கொண்டனர். இதேபோன்று மானிப் பாய் மருதடி விநாயகர் ஆலயமும் நிர்மா ணிக்கப்பட்டது. தியாகராசா குருக்களுக் குப் பின்பு ஆதி சைவ அந்தணர்கள், அர்ச்சர்களால் நியமிக்கப்பட்டு நித்திய, நைமித்திய பூசைகளும் திருவிழாக்களும் மிக சிறப்பாக நடைபெறலாயின. ஆண்டு தோறும் தேர்த்திருவிழா மஹோற்சவம் சித்திரை மாதம் புதுவருடப்பிறப்பன்று நிகழ்ந்து வருகின்றது. ஆலயத்தில் திருப் பணி வேலைகள் காலத்துக்கு காலம் பொது மக்களாலும் தனவந்தர்களாலும் செய்யப்பட்டு வந்தன. எனினும் இவ்வா லயம் சில தனிப்பட்ட நபர்களினால் நிர் வகிக்கப்பட்டு வந்தது.

1982ஆம் ஆண்டில் தனிநபர் நிர் வாகம் நீங்கியது. கோயிலை நிர்வகிப் பதற்கு வழிபடுவோர் சங்கம் தெரிவு செய் யப்பட்டு அவர்களின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்டு தர்மகத்தா சபையை அமைத்து வழிபடுவோர் சங்கத்தின் முழுமையான ஆதரவுடன் ஆலயத்தின் முன்னேற்றத்தை நோக்கி செயற்பட்டு வருகின்றனர்.

**"ஐங்கரனே ஈசன் திருமகனே**
**தங்குமருதடி வாழ் தற்பரனே-**
**திங்களணி செஞ்சடிலத்தானே**
**திருமால் மருமகனே**
**நெஞ்சத்தில் வாழ்ந்திருப்பாய் நீ"**

### வாழ்த்துச் செய்தி

சகல வளங்களும் அமைந்த மானிப்பாய் நகரில் அருளாட்சி செய்யும் மருதடி விநா யகரின் தேர் உற்சவத்தைக் காணவரும் அடி யார்கள், பக்தர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

வேண்டுவார் வேண்டுவதை உவந்தளிக்கும் மருதடி விநாயகப் பெருமான் புது வருடப் பிறப் பன்று அழகிய ரதத்தில் வீதி உலா வந்து அருள் பாலிக்கின்றார். தன்னைத் தேடி வரும் அடிய வர்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் மானிப் பாய் மருதடி விநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சம் சகலருக்கும் கிடைக்க வேண்டும் என அருளாசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்று நிகழும் மானி நகர் மருதடி விநாய கப் பெருமானின் திருத்தேர் பவனி விழா சிறப்புற விக்கினம் தீர்க்கும் மருதடியானின் பாதார விந்தங்களை வணங்கி உளமார பிரார் த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்**
**நல்லை ஆதீன முதல்வர்.**


























(8463)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இன ஒற்றுமையை ஏற்படுத்த புத்தாண்டு ஒன்று போதாதோ!

இன்று தமிழ் – சிங்கள புத்தாண்டு. அறுபது ஆண்டுகள் சுழற்சியில் இன்று விகாரி புத்தாண்டு பிறக்கின்றது. பிறக்கின்ற இப்புத்தாண்டு தமிழ் – சிங்கள புத்தாண்டாகும்.

ஆக, தமிழ் மக்களின் புத்தாண்டுதான் சிங்கள மக்களுக்கும் புத்தாண்டாக அமைகின்றது.

ஒரே புத்தாண்டை தமிழ் மக்களும் சிங்கள மக்களும் கொண்டாடுகின்றனர் எனும்போது தமிழ் சிங்கள இனத்துக்குள் ஒரு பலமான ஒற்றுமைக்கூறு இருப்பதை உணர முடியும்.

இதுதவிர, பௌத்தம் என்பது இந்து மதக் கொள்கை, கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது.

கௌதம புத்தபிரானுக்காக அமைக்கப்படும் பன்சலையில் விநாயகர், காளி, முருகன் ஆகிய தெய்வங்களை பிரதிஷ்டை செய்கின்ற மரபு உண்டு.

இதற்கு மேலாக, தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகப் பெருமானை சிங்கள மக்கள் தங்களின் வழிபாட்டுத் தெய்வமாக வணங்குவதைக் காண முடியும்.

கதிர்காமத்தில் பூசை செய்பவர்களும் அங்கு வழிபாடு ஆற்றுகின்றவர்களில் அதிகமானவர்களாக இருப்பவர்களும் சிங்கள மக்கள் என்பது புரிதற்குரியது.

இதை நாம் கூறுவதற்காக கதிர்காமத்தை சிங்கள இனத்திடம் ஒப்படைத்து விடுகிறீர்களா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். ஆனால் நாம் கூற வந்த கருத்து அதுவன்று.

மாறாக சிங்கள மக்கள் தமிழ்க் கடவுள் முருகனை பக்திபூர்வமாக வணங்குகின்றனர் எனும் போது அவர்களுக்கும் தமிழினத்துக்கும் இடையில் பலமான ஒற்றுமைப் பண்புகள் உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுவதேயாகும்.

அதாவது தமிழ்ப் புத்தாண்டு எனும்போது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் இப்புத்தாண்டு ஏற்புடையதா? என்றால் இல்லை என்பதே பதில்.

அப்படியானால், ஆங்கிலப் புத்தாண்டைக் கொண்டாடுகின்ற தமிழ் மக்களும் உள்ளனர். எனவே தமிழ் மக்களில் ஒரு சாரார் தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடாமல் விடும்போது, தமிழ்ப் புத்தாண்டு சிங்கள மக்களினதும் புத்தாண்டாக இருப்பதென்பது கலப்படமற்ற ஒற்றுமைக்கான பண்பாட்டுக் கூறுகள் இரு இனங்களிலும் காணப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தவிர, தமிழ்க் கடவுள்களை பௌத்த மக்கள் போற்றி வழிபடுகின்றனர். நல்லூர் முருகன், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆகிய ஆலயங்களில் சிங்கள மக்கள் வழிபாடாற்றும்போது அவர்களிடம் காணப்படும் பயபக்தி எம்மை நெக்குருக வைக்கும்.

இதற்கு மேலாக, இந்துக் கடவுளுக்கு பௌத்த விகாரைகளில் வழிபாட்டு இடம் அமைக்கப்படுகிறதெனும்போது இரு இன உறவு நிலை எத்துணை ஒருங்கிசையக்கூடியதென்பது தெரிகிறது.

இருந்தும் இன ஒற்றுமையைப் பேணுவதற்கு ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். இந்த நிலைமை மாற்ற முற்று, தமிழ் மக்களுக்கான அத்தனை உரிமைகளும் அதிகாரங்களும் வழங்கப்பட்டு தமிழ் – சிங்கள மக்களின் உறவு ஒவ்வொரு புத்தாண்டோடும் பொலிவு பெற வேண்டும் என்பதே இன்றைய புத்தாண்டில் நம் பிரார்த்தனையாகும்.

# கடற்படையினரை வெளியேற்றக்கோரி சிலாவத்துறையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அகற்றி தமது காணிகளை வழங்கக் கோரி சிலாவத்துறையில் நேற்று சனிக்கிழமை 52 வது நாளாக தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையில் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்

தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் இதுவரை அரசாங்கத்திடம் இருந்தோ கடற்படையிடம் இருந்தோ தங்களுக்கு எந்தவித சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர்

யுத்தத்தின்போது முசலி பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தாங்கள் மீண்டும் முசலி பகுதிக்கு மீள்குடியேற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் வந்தும் கடற்படையினர் எமது காணிகளை ஆக்கிரமித்திருப்பதால் தாங்களும் எங்களுடன் சேர்ந்த 218க்கும் மேற்பட்ட குடும்பங்களும் மீள்குடியேற்றப்பட முடியாத நிலையில் உள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.(ம-285)

## தரமற்ற உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த 2,821 வியாபாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை

தரமற்ற உணவுப்பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 2821 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பயன்பாட்டுக்குத் தகுதியற்ற முறையில் உணவுப் பண்டங்களை தயாரித்த 21 வர்த்தக நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டதாகவும் அச்சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய கூறியுள்ளார்.

இந்த விசேட சோதனை நடவடிக்கையில் 2700 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 38.3 பாகை வெப்பம் வவுனியாவில் பதிவு

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் வவுனியாவில் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

38.3 பாகை செல்சியஸாக வவுனியாவில் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலநறுவையில் 37.5 பாகை செல்சியசும் குருநாகலில் 37.2 பாகை செல்சியசும் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

நாளைவரை நாட்டின் பல பகுதிகளிலும் கடும் வெப்பத்துடனான வானிலை நிலவும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இன்று வடகிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, மொனராகலை, கம்பஹா, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடும் வெப்பம் நிலவும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். (ம-3)

## திருகோணமலைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பன்றி இறைச்சி கொண்டு சென்றவர் விளக்கமறியலில்

திருகோணமலை கந்தளாவ பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 12 கிலோ பன்றி இறைச்சியை கொண்டு சென்ற நபரொருவரை இம் மாதம் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதிவான் சானிக்கா பெரேரா நேற்று உத்தரவிட்டார்.

கந்தளாவ, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அலுத்ஓயா பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் தனது வீட்டுக்கு விற்பனைக்காக அனுமதிப் பத்திரமின்றி 12 கிலோ பன்றி இறைச்சியை கொணடு சென்றபோதே கந்தளாய் போக்குவரத்து பொலிஸார் நிறுத்தி சோதனை செய்த போதே சந்தேக நபர் பன்றி இறைச்சியை கொண்டு சென்றதை கண்டறிந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்து கந்தளாய் நீதிமன்ற பதில் நீதவான் வாசஸ்தலம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-3)

## இ.போ.ச பேருந்து மோதி வயோதிபர் உயிரிழப்பு

வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாரியபொல - சிலாபம் வீதியில் ரம்பாவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபம் நோக்கி புறப்பட்ட இ.போ.ச. பேருந்து ஒன்று நேற்று அதிகாலை 5.20 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கல்லேபிட்டி, கன்தேவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய முதியவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாரியபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

## 300 மதுபான போத்தல்களுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 300 மதுபான போத்தல்கள் மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேடமாக இணைக்கப்பட்டுள்ள கலால் திணைக்கள அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள வீடொன்றை சோதனை செய்தபோது 180 மில்லி லீற்றர் உடைய 300 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

50 போத்தல்கள் வீதம் அடைக்கப்பட்ட 06 பெட்டிகளுடன் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளதுடன், கலால் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இறைவன் கூறுகின்றான்: எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்பணிகள் ஆற்றி தொழுகையையும் நிலைநாட்டி, ஜகாத்தும்(தர்மமும்) கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு உரிய கூலி நிச்சயமாக அவர்களுடைய அதிபதியிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.
- நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றவர்களையும் பூமியில் அராஜகம் செய்து திரிபவர்களையும் நாம் சமமாக்கி விடுவோமா என்ன? இறையச்சமுள்ளோரை ஒழுக்கக் கேடர்களைப் போன்று ஆக்குவோமா, என்ன?
- நம்பிக்கையாளராய் இருப்பவர் பாவம் செய்தவர் போல ஆகிவிடுவாரா?
- நபிகள் நாயகம்(ஸல்) நவின்றார்கள்: தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை ஒருவன் இறைநம்பிக்கையாளனாக மாட்டான்.
- எவருடைய அண்டை வீட்டார் அவரது துன்பங்களை விட்டுப் பாதுகாப்பு பெறவில்லையோ அவர் இறைநம்பிக்கை இல்லாதவர்.
- நாணமும், பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அப்புறப்படுத்துவதும் இறைநம்பிக்கையின் பகுதிகளாகும். (வேத வரிகளும் தூதர்மொழிகளும் நூலில் இருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையுடனான ஒளிமயமானதொரு எதிர்காலம் எம் மக்களுக்குக்கிட்ட வேண்டும்

(கொழும்பு))

கடந்து போகின்ற வருடத்தில் ஆக்கபூர்வமான எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களுக்குக் கிட்டாது போனாலும் இந்தப் புத்தாண்டையும் வழமைபோல் பல்வேறு எதிர்பார்ப்புகளோடும் நம்பிக்கைகளோடும் "சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன்" போல வரவேற்கிறார்கள்.

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக பல்வேறு துயரங்களைச் சந்தித்து வந்த எமது சமுதாயம் யுத்த அனர்த்தம் முடிந்து நிம்மதிப் பெருமூச்சு விடலாமென ஏங்கியபோது சமாதான காலமெனக் கூறப்படும் யுத்தத்திற்குப் பின்னரான காலத்திலும் தொடர்ந்தும் சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிய வண்ணமே வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். "சாணேற முழம் சறுக்கும்" என்ற பழமொழி ஈழத்தமிழ் மக்களுக்கே உரித்தானதாகவுள்ளது.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. ஒரு பக்கம் "பெருமளவான நிலங்கள் கையளிக்கப்பட்டு விட்டதாக" கூறும் அரசும், மறுபுறம் தமது காணிகளை விடுவிக்க 2 வருடங்களுக்கு மேலாக வீதியில் இரவு-பகல் போராடும் மக்களும் என, எமது இனம் குறுகிய பலாபலன்களுக்காக பலிக்கடாவாக்கப்பட்டுள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது.

காணாமல் போனவர்களின் நிலை குறித்து அரசு எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. காணாமல் போனோரைத் தேடவேண்டிய பொறுப்பை மூடி மறைத்து அவர்களுக்கு இழப்பீடு வழங்க முன்னிற்பதானது தமது குற்றங்களை மறைக்கத்தான் என்பது வேதனையான விடயம்.

தொடர் போராட்டங்கள் செய்தும் அரசியல் கைதிகளின் விடுதலை அரசால் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லை. மேலும், சிறுபான்மையினத்தவரின் வணக்கத் தலங்களை அழித்தல், சேதமாக்கல் அவர்களின் குடிப்பரம்பலை மாற்ற முயற்சித்தல் போன்ற கைங்கரியங்களில் பெரும்பான்மையினருடனிணைந்து ஏனைய மதத்தினரும் ஈடுபடுவதுடன், இந்துக் கோயில்களிலுள்ள விக்கிரகங்கள் களவாடப்படுவதும் சேதப்படுத்தப்படுவதும் தொடர்கதையாகவுள்ளது.

குறிப்பாக 2018 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி தினத்தில் இந்துக்களின் புனிதத்தலமான திருக்கேதீச்சர திருத்தலத்தில் மகா சிவராத்திரியை அனுஷ்டித்துக் கொண்டிருந்த வேளையில் அதே பிரதேசத்திலிருந்த இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டு விக்கிரகங்கள் உடைக்கப்பட்டது போல, இவ்வருடமும் சிவராத்திரிக்கு ஒரு சில தினங்களுக்கு முன் திருக்கேதீச்சர ஆலயத்தின் வரவேற்பு வளைவு ஒரு மத குருவின் முன்னிலையிலே "உலகமே வியக்கும் வகையில் பிடுங்கியெறிந்ததும்" இடம்பெற்றது.

இதுவரை காலமும் மன்னாரில் இந்து மக்களை ஒடுக்க, ஏனைய மதத்தினரின் திரைமறைவு திட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று நம்பியிருந்த உலகத்தை, அவ்வாறான இந்துக்களை ஒடுக்கும் திரைமறைவு செயற்றிட்டங்கள் மாற்று மதத்தவரால் நிச்சயமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றதை மேற்படி சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யும்படி நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தும் அதனை உதாசீனம் செய்து பொலிஸாரையே தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய அளவிற்கு அங்கு நிலைமைகள் இந்துக்களுக்கு எதிராக உள்ளதை பட்டவர்த்தனமாக காட்டியது.

சமயப்பணியுடன் சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வரும் இந்துமாமன்றம் தமிழ் மக்களுக்கு எங்கெல்லாம் வேதனைகள், சோதனைகள் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் உடன் சென்று உதவிக்கரம் நீட்ட என்றும் பின் நிற்கப் போவதில்லை. இவ்வாறான சம்பவங்களுக்கு மாமன்றம் என்றும் தராதரம் பாராது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க என்றுமே தயங்காது என்பதையும் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

தமிழ் மக்களது வாழ்நாளில் தொடரும்துயர நிலைமுற்றாக நீங்கி, உதயமாகும் விகாரி புதுவருடத்தில் சுயநிர்ணய உரிமையுடனான ஒளிமயமானதொரு எதிர்காலம் எம்மக்களுக்கு கிட்ட வேண்டும் எனவும் மக்களின் நல்ல எதிர்காலத்திற்கென அரசாங்கமும் நல்லெண்ண நடவடிக்கைகளை முனனெடுக்க வேண்டும் எனவும் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் வே.கந்தசாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அடிப்படை வசதிகளின்றி தொடர்ந்தும் அவதியுறும் முள்ளிக்குளம் மக்கள்

## அதிகாரிகள் அலட்சியம்



(முசலி)

மன்னார், முசலி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் மக்கள் தமது சொந்த இடத்தில் மீள்குடியேறி இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரை தாங்கள் தொடர்ச்சியாக அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அவதியுறுவதாகவும் அரச அதிகாரிகள் தொடர்ச்சியாக பாராமுகமாக செயற்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முள்ளிக்குளம் மக்கள் யுத்த காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக தங்களுடைய சொந்தக் கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக மலங்காடு எனும் பகுதியில் கட்டாயத்தின் பெயரில் குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த மலங்காட்டு பகுதியில் வசித்தாலும் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்தனர்.

தண்ணீர், கல்வி மற்றும் ஏனைய பொதுத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இதேநேரத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரும் குறித்த மக்கள் முள்ளிக்குளம் பகுதியில் மீள் குடியேற்றப்படாமையினால் கடந்த 2016 ஆம் ஆண்டு முள்ளிக்குளத்தை பூர்வீகமாகக் கொண்ட மக்கள் தங்கள் சொந்த நிலம் தங்களுக்கு வேண்டும் என கோரிக்கை முன்வைத்து முள்ளிக்குளம் கடற்படை முகாமுக்கு முன்பாக தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

குறித்த போராட்டத்தின் பலனாக அதே ஆண்டில் சில காணிகளை தவிர்த்து ஏனைய 100 ஏக்கர் காணியை உடனடியாக விடுவிப்பதாகவும் ஏனைய பொதுமக்களின் காணிகளை படிப்படியாக விடுவிப்பதாகவும் அதேநேரத்தில் பொது மக்களின் வீடுகளில் குடியிருக்கும் கடற்படையினர் 6 மாத காலத்திற்குள் வெளியேறுவதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டு மக்கள் முள்ளிக்குளம் கிராமத்திற்குள் மீள் குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் மீள்குடியேறி இரண்டு வருடங்கள் கடந்தும் முள்ளிக்குளம் மக்கள் அடிப்படை வசதிகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படும் தற்காலிக கொட்டில்களில் யானைகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அதேபோன்று இதுவரை குறித்த மக்கள் வசிப்பதற்கு தற்காலிக பூரணப்படுத்தப்பட்ட கொட்டில்கள், குடிப்பதற்கு நீர் வசதியோ மின்சார வசதியோ அரசாங்கத்தால் செய்து தரப்படவில்லை என முள்ளிக்குள மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

பெண்கள் அதிகமாக இருக்கும் நிலையில் தங்களுக்கு என கழிப்பறை வசதிகள் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது எனவும் மழை காலங்களில் சேதமடைந்த கொட்டில்களில் தங்க முடியாத நிலையும் குளம் நிரம்புவதால் வெள்ளப்பாதிப்பும் ஏற்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் மின்சார வசதி இல்லாததால் இரவு நேரங்களில் யானைகளின் தொல்லைகள் அதிகமாகக் காணப்படுவதால் தாங்கள் மீண்டும் மலங்காட்டுப் பகுதிக்கே செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு தங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளையாவது செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை முள்ளிக்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் மின்சார வசதி, அடுக்கு மாடி கட்டடங்கள் மற்றும் முள்ளிக்குள மக்களின் வீடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்வதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# செவனகல பிரதேசத்தில் இருவர் வெட்டிக்கொலை

(செவனகல)

செவனகல, துங்கமயாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இரண்டு பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. பயிர் நிலம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த குடிசையில் உறங்கிக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 39 மற்றும் 54 வயதுடைய இரண்டு பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். செவனகல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 160 |
| தக்காளி | 120 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 160 | 110 | 80 |
| கோவா | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 70 | 100 | 70 | 160 |
| பூசணி | 40 | 50 | 25 | 40 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 70 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 | 100 |
| பாகற்காய் | 140 | 160 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 45 | 100 |
| பயற்றங்காய் | 160 | 150 | 150 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 250 | 400 |
| போஞ்சி | 150 | 200 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 20-25 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 200 | 170 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 150 | 150 | 100-110 | 120 |
| வெங்காயப்பூ | 300 | — | 140 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 30-35 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 100-110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று முதல்...

நிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இதற்கமைய, இன்றைய தினம் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளிலும் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

குறித்த பகுதிகளில் பணிகளில் ஈடுபடுபவர்கள், அதிகளவு நீரை அருந்த வேண்டும் என்றும், தங்களது பணியிடங்களில் தேவையான அளவு ஓய்வாக இருக்க வேண்டும் என்றும் காலநிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேநேரம், முதியோர்கள் மற்றும் நோய்த்தாக்கம் உள்ளவர்கள் குறித்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அத்துடன், குழந்தைகளையும், சிறுவர்களையும் வாகனங்களில் தனியாக விட்டுச் செல்லக்கூடாது என்றும் அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, அதிக பணிச்சுமையை தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நேற்று இரவு...

அளவில் இந்து சமுத்திரத்தின் மொஹெறன் பகுதியை அண்மித்து இந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

5.3 மற்றும் 4.9 ரிக்டர் அளவுகளில் இந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலநடுக்கம் தொடர்பில் இதுவரை வேறு எந்தவிதமான தகவல்களும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ரத்துச் செய்த...

சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர், திருப்பதிக்குப் பயணம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார்.

எனினும், அந்தப் பயணத்தை அவர் திடீரென நிறுத்தியிருப்பதாகவும் அவர் இலங்கையிலேயே தங்கியிருப்பார் என்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## பெண் ஒருவரி...

வல்வெட்டித்துறை பகுதியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அறுத்து சென்றதாக வல்வெட்டித்துறை பொலிஸார் மூலம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து துரிதமாக செயற்பட்ட புலனாய்வுப் பிரிவினர் மந்திகை - துன்னாலைக்கு இடைப்பட்ட அல்லையம்பதி பகுதியில் வைத்து சங்கிலி அறுத்த வழிப்பறி கொள்ளையனை மடக்கிப்பிடித்து நெல்லியடி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (ம-60)


கொவிசெத

திகதி 2019.04.12

சீட்டிழுப்பு இலக்கம் 2092

ஆங்கில எழுத்து Q

வெல்லும் இலக்கங்கள் 12 41 62 72

தேசிய லொத்தர் சபை


# இலங்கையில் உள்ள தமிழர்களின் வாழ்வை வளமாக்க வேண்டும்


## தமிழகத்தில் மோடி தீவிர பிரசாரம்

(சென்னை)

இலங்கையில் உள்ள தமிழ் சகோதரர்களின் வாழ்வை நாம் வளமாக்க வேண்டும் என பிரதமர் மோடி தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்தார்.

ஏழு கட்டங்களாக நடைபெறும் இந்திய மக்களவைத் தேர்தலில் தமிழகத்திற்கான வாக்குப்பதிவு எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தமிழகத்தின் நான்கு இடங்களில் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று அங்கு



சென்றார்.

தமிழகத்தின் தேனிக்கு நேற்று சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, இராணுவ வீரர்கள் முதல் விவசாயிகள் வரை அனைவரும் மகிழ்ச்சியாக வாழும் புதிய இந்தியாவை நோக்கி நாடு நகர்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் மண் இது. அந்த மகத்தான தலைவர்கள் தீட்டிய திட்டங்களால் ஏழை மக்கள் பயனடைந்தனர். அவர்களை நினைத்து இந்தியா பெருமைகொள்கிறது. காங்கிரஸ் - தி.மு.க இணைந்துகொண்டு நமது நோக்கத்தை திசை திருப்புகின்றன.

கடந்த கால கசப்புகளை எல்லாம் மறந்து காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி அமைத்திருக்கிறது. தி.மு.க தலைவர் ஸ்டாலின், ராகுலை பிரதமராக முன்மொழிந்தார். ஆனால், அந்த மேடையில் இருந்த கூட்டணிக் கட்சியை சார்ந்தவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், அந்தக் கூட்டணியில் உள்ள ஒவ்வொரு கட்சியின் தலைவருக்கும் தான் பிரதமராக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. என நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ் சகோதரர்கள் வாழ்வை வளமாக்க வேண்டும். வாரிசு அரசியல், ஊழல் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழகத்தின் கிருஷ்ணகிரி, சேலம், தேனி, மதுரை ஆகிய 4 மாவட்டங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார்.

தேனியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு ராகுல் காந்தி மோடியை கடுமையாக விமர்சித்துள்ளார்.

தமிழ் மொழி, தமிழக மக்கள், தமிழ் மக்களின் கலாசாரம், தமிழகத்தின் வரலாற்றை தான் மதிப்பதாகவும் நரேந்திர மோடி தமிழக மக்களின் மீது ஒற்றைக் கலாசாரத்தை திணிக்க முயல்வதாகவும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடனான தனது உறவு அரசியல்பூர்வமானது அல்ல. உணர்வுபூர்வமானது எனவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## மானிடம் இன்...

சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமைதி, சாந்தி, சமாதானம் நிலைக்க வேண்டுமாயின் மனித மனங்கள் புனிதமாகவேண்டும்.

மனித மனங்களைப் புனிதமாக்குவது மக்கள் தொண்டும் இறைவழிபாடுமாகும் எனவே இன்று பிறக்கின்ற தமிழ் - சிங்கள புத்தாண்டு எல்லோருக்கும் இன்பமயமாக அமைய எல்லோரும் எல்லோரையும் மதிக்கின்ற உயர்ந்த பண்பை வளர்ப்போம் என்றும் நல்லை ஆதீன சுவாமிகள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதியாக...

டின் ஜனாதிபதியாக வரமுடியாது. சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மீண்டும் களமிறங்குவாரென பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல கட்சிகளுடன் இணைந்து பாரிய கூட்டமைப்பாக எதிர்வரும் தேர்தலில் களமிறங்கும் நாம் சட்டத்துக்கு கட்டுப்படும் பிரஜைகள். சட்டம் அனைவருக்கும் பொதுவானது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கீத்தா குமாரசிங்க இரட்டை பிரஜாவுரிமை வைத்திருந்த குற்றச்சாட்டின் காரணமாக தனது பாராளுமன்ற ஆசனத்தை இழந்தார். இதே சட்டம் தான் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் உள்ளது. சட்டம் அனைவருக்கும் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் இடம்பெறுவதாக குறிப்பிடப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். போதைப்பொருள் கடத்தல் மாஃபியாவை கட்டுப்படுத்த ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் உச்சகட்ட செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. மீண்டும் நாட்டுத் தலைவரை தீர்மானிக்கும் போது நாட்டு மக்கள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம-3)

# கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகு மற்றும் வலைகள் விசமிகளால் தீ வைத்து எரிப்பு

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்



(கரணவாய்)

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகு மற்றும் கடற்றொழில் வலைகள் விசமிகளால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் வடமராட்சி கிழக்கு அல்வாய் [illegible] பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தன் சுரேந்திரராசா என்பவரது மீன்பிடிப் படகு, வலைகளே எரியுண்டன.

புதிதாக கரை வலையை கொள்வனது செய்து நேற்று முதல் முதலாக தொழிலை மேற்கொண்டு விட்டு படகு மற்றும் வலைகளை கடற்கரையில் வைத்து விட்டு வீடு சென்றுள்ள நிலையில் கடற்கரையில் ஏதோ எரிந்து கொண்டிருப்பதை கண்ணுற்று கடற்கரைக்கு சென்றபோது படகு மற்றும் வலைகள் எரிந்து கொண்டிருந்துள்ளன.

ஊரார்கள் சேர்ந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை என்றும் இப்படகு மற்றும் வலைகளின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-60)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சர்வதேசமே இனப்பிரச்சினைக்கு...

காணப்படும் இழுபறி நிலைமைக்கும் சர்வதேசம் ஒரு தீர்க்கமான நடவடிக்கையை முன்வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரசியல் அமைப்பை மீறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்டோபர் மாதம் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார். இந்த செயற்பாட்டிற்கு சர்வதேச நாடுகள் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர்.

அதேபோல் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை இலங்கை அரசோ அல்லது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையோ தீர்க்கா விட்டால், சர்வதேச நாடுகள் இதனை தீர்க்க வேண்டுமென நாம் வற்புறுத்துகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## சங்கீதக் கதிரை...

பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த நிகழ்வில் இடம்பெற்ற சங்கீதக் கதிரை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இவர், திடீரென மயங்கி வீழ்ந்து மரணமானார்.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் ஏற்கெனவே அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## யாழிலிருந்து...

இடம் பெற்றுள்ளது.

ஹயஸ் ஒன்றும் கனரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

லண்டனில் வசிக்கும் நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை சேர்ந்த முருகேசு செஞ்சுடர் கலாரூபி (வயது 48) என்ற பெண்ணே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

திருமண வீடொன்றுக்கு சென்றுவிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்து கொண்டிருந்த ஹயஸ்வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஆரச்சிகட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## இராணுவ முகா...

சித்திரவதைக்கு எதிரான ஐ.நா உபகுழுவின் பிரதிநிதிகள் நால்வர் முதல் முறையாக இலங்கைக்கு ஆய்வுப் பயணத்தை கடந்த 2ஆம் திகதி மேற்கொண்டனர்.

நேற்று முன்தினத்துடன் இந்தக் குழுவினரின் இலங்கைப் பயணம் நிறை வடைந்தது.

இந்தப் பயணம் தொடர்பாக, நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட குழுவின் தலைவர், விக்டர் சகாரியா, இந்தப் பயணத்தின் போது எமக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. தடுப்பு நிலையங்கள் அனைத்துக்கும் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களையும் பெறுவதற்கும், இரகசியமாக நேர்காணல்களை நடத்தவும் அனுமதிக்கப்பட்டது.

சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்துக்கு ஏற்ப, ஒரு தேசிய தடுப்பு பொறிமுறையை உருவாக்குவதில், இலங்கை சாதகமான நிலையில் உள்ளது. இரகசியத்தன்மை, பாரபட்சமின்மை, சார்பற்ற தன்மை, உலகளாவிய தன்மை மற்றும் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் எமது பணி வழிநடத்தப்படுகிறது.

எமது குழுவினர் இலங்கையில், பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், விளக்கமறியல் சிறைச்சாலைகள், இராணுவ முகாம்கள், புனர்வாழ்வு முகாம்கள், மனநல அமைப்பு, சிறார் புனர்வாழ்வு நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிட்டதுடன், அரச பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியுள்ளோம்.

அடுத்ததாக, எமது உப குழு, இந்தப் பயணத்தின் கண்டறிவுகள் தொடர்பாக இலங்கை அரசுக்கு இரகசிய அறிக்கை ஒன்றை அளிக்கும். அதில் எமது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைக் குறிப்பிடுவோம். இந்த அறிக்கையை அரச தரப்புகள் பகிரங்கப்படுத்துவதையும் ஐ.நா உப குழு ஊக்குவிக்கும் என்று தெரிவித்தார். (ம-3)

## இலங்கையுட...

பாதுகாப்பானதும், வளமானதுமான புது வருடத்தை கொண்டாட தமது நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்துவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## 17 பவுண் தங்க...

புற்றளைப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த போது வீட்டின் கதவை உடைத்து உள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டாரை அச்சுறுத்தி அவர்களிடமிருந்த 17 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## முள்ளிவாய்க்கால் அவலத்தை...

வருவேன் என ஆங்கில திரைப்பட இயக்குநர் க.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்று தசாப்த காலமாக கனடாவில் பல ஆங்கிலத் திரைப்படங்களை இயக்கி வெளியிட்டுள்ளேன்.

எனது இயக்கத்தில் உருவான (Beneath The Skin Wintold Story) என்ற திரைப்படம் 2002ஆம் ஆண்டு 3 விருதுகளை வென்றுள்ளது.

எனவே நான் பிறந்த மண்ணில் இடம்பெற்ற அநீதிகளை திரைப்படமாக்க 100க்கு மேற்பட்ட உண்மைக்கதைகளைக் கொண்ட திரைப்படமாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன் என அவர்மேலும் தெரிவித்தார். (ம-10)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரலிங்கம் கௌரியம்மா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரலிங்கம் கௌரியம்மா அவர்கள் 13.04.2019 சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) - அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வியும், ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மகேஸ்வரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சுயம்புலிங்கம் ஐயா (இணுவில் சிவன்கோவில் தர்மகர்த்தா), கோகிலவர்ஷினியின் அன்புத் தாயாரும், சிவபூசணி (ஆசிரியர், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரன், கெங்காதரன், சிவஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் சிவகாமி ஞானாம்பிகை, செந்திருசெல்வி, காலஞ்சென்ற ரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-6084)

சிவன் கோவிலடி, கே.கே.எஸ் வீதி, இணுவில். - குடும்பத்தினர்


பிரத்தியேக வகுப்புக்கள்
ACCA - F1
தொடர்பு - 077 301 1989 (8446)

விற்பனைக்கு
Nokia Phone (2G), I Phone 7 (32GB) Micro SD Cards, Monitors, I Pad - 64 GB, Bluetooth Speaker.
தொடர்பு - 077 717 2325 (8466)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி (C-6035)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

வேலை வாய்ப்பு
பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல திருமண மண்டபத்திற்கு சமையல் ஆட்கள் தேவை (Chef) அடிப்படைச் சம்பளம் 45,000/= அத்துடன் அடிப்படைக் கணனி அறிவுடைய வேலையாட்கள் தேவை. (ஆண், பெண்)
தொடர்புகளுக்கு : 077 704 6623, 077 315 1654 (C-6081)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS (C-6088)
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

வீட்டுப் பணிப்பெண் தேவை
கொழும்பில் கௌரவமான இந்து குடும்பம் ஒன்றிற்கு வீட்டு பணிப்பெண் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு : 0777427568 (8459)

வீடு வாடகைக்கு
யாழ்.நகர் கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகாமையில் உள்ள 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு (முன்பு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் இயங்கியது.)
தொடர்பு : 077 378 0585, 077 953 0496

Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
Your Baby Is Our Concern.



உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள் (C-6072)
வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்
இல.30, கன்னாதிட்டி றோட், (வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel : 077 742 7322


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org